REGD M. 4642

தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
,, 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 4–9–49 | இதழ் 10

மாஜி கடவுள்கள்
3.

★ பாசிடன் ★

இது ஒரு ரகம்!

"வயது வந்தவர்களுக் கெல்லாம் வோட்டுரிமை அளித்தால் நாடு குட்டிச்சுவராகி விடும்!"

யாரப்பா, இந்த மணி வாசகம் தந்த மாவீரர்! என்று கேட்கத் தோன்றும் தோழர்களுக்கு, கூற்றுப் புதியதாக, ஆச்சரியம் தரக்கூடியதாக இருப்பதால். 'உரிமை, உரிமை!' என்ற முழக்கம் எங்கும், எதிரொலிக்கும், இந்நேரத்தில், இத்தகைய 'அறிவுரை' தந்த ஆள் யார், என்று தெரிந்துகொள்ள, ஆசை எழும்பத்தான் செய்யும். இந்த மணி மொழி தந்தவர் சாதாரண ஆள் அல்ல, கூறப்பட்ட இடமும் தெருவீதி அல்ல! இந்தியாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கிறதே அரசியலமைப்புச்சபை, அங்கு, கொஞ்ச நாட்களுக்குமுன் கூறினார்! இந்தப் புதுஉரை தந்த 'புனிதர்' பெயர் பிரஜேஸ்வர பிரசாத்!! விசித்திரமாக இருக்கிறதே, நாட்டின் அரசியலை நிர்ணயிக்கும் சபையில், அதுவும் அரசியலை அமைக்கும் பொறுப்புக்கொண்ட ஒரு உறுப்பினரா கூறினார், வேடிக்கையாகயிருக்கிறதே என்று நமக்கு நகைக்கத் தோன்றும். நமக்கு மட்டுமல்ல, இந்த உரை கேட்டபோது, சபையிலிருந்த சில உறுப்பினர்களுக்குக் கூடச் சிரிப்புத்தான் வந்ததாம்!

வயது வந்தோருக்கு வாக்குரிமை தந்தால் நாடு குட்டிச்சுவராகி விடும் என்று 'காணாததைக் கண்டு'உரைத்தாரே, தோழர், அவர் அதற்குக் காட்டும் காரணமிருக்கிறதே, அது அதைவிட இன்னும் 'மூற்போக்கானது!' அவர் கூறுகிறார் கேளுங்கள், வாக்குரிமை வயது வந்தோருக்கு கூடாது, என்பதற்கு!

> "ஏனென்றால் நம் நாட்டு மக்கள் படிக்காதவர்கள் பட்டும் அல்ல, குறுகிய மனப்பான்மை உடையவர்களும் ஆவார்கள்."

எனவே, வாக்குரிமை கூடாது, என்கிறார், இந்தப் பிரமுகர்! உள்ளபடியே ஆத்திரம் எழும்புவதற்குப் பதில் 'ஹாஸ்யம்'தான் உதிக்கிறது இவர் கூற்றைக் கேட்ட நமக்கு!

படிக்காதவர்கள், குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்பதற்காகவோட்டுரிமைகொடுக்கக்கூடாது, அப்படி அளித்தால் நாடு குட்டிச்சுவராகிவிடும் என்கிறார் 'பரந்த மனப்பான்மை'யுடன் இவர்!

கூறியவர் சாதாரண ஆள் அல்ல, அரசியலை, நாட்டு மக்கள் வாழ்வை, அமைக்கும் உரிமை கொண்டவர். கூறப்பட்ட இடமும், குப்பைமேடு அல்ல, ஒரு பரந்த உபகண்டத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்இடம்! மக்கள் வாழ்வை அமைத்துத் தரவேண்டிய பொறுப்பில் உட்கார வைக்கப்பட்டிருக்கும் அவர் கூறுகிறார், வயது வந்தவர்களுக் கெல்லாம், வாக்குரிமை அளிக்கப்பட வேண்டாமென்று!

கூற்று விசித்திரமாக மட்டுமல்ல, வேதனையைத் தரக்கூடியதாகவும் இருக்கிறது. மக்கள் வாழ்வைச் செப்பனிடுவதற்காகத் திட்டங்கள் வகுக்கப்படும் ஒரு சபையில், மக்கள் வாழ்வின் உரிமையையே பறிக்கும் விதமாகப் பேசப்படுகிறது.

மக்கள் நலன் காண—நல்ல வழி அமைக்கச் சென்றவர், எது அவர்களை பாதிக்குமோ, படுகுழியிலேயே ஆழ்ந்து கிடக்குமாறு செய்யுமோ, அந்த வழியைக் கூறுகிறார்!

பொறுப்பை மறந்து, அந்தப் பொறுப்புக்கு நேர்முரணாகப் பேசும் 'பிரஜேஸ்வர பிரசாத்துக்கள்' நாட்டிலும் ஏராளமாக நடமாடத்தான் செய்கின்றனர். மக்கள் சுதந்திரத்காகப் பாடுபடுகிறேன் என்று உதடு உச்சரிக்கும், இன்னும் கொஞ்ச நேரம் போனால் அதே வாய், எது அவர்கள் சுதந்திரத்தை இழக்கச் செய்யுமோ அந்த வழியைக் கூறிக்கொண்டிருக்கும்! இது ஒரு ரகம். இந்தரகம் இன்று நாட்டில் ஏராளமாக இருக்கிறது. மக்கள் உரிமைக்காகப் போராடுகிறோம், மக்கள் வாழ்வே எங்கள் இலட்சியம் என்றெல்லாம் முழக்கமிட்டு, ஆட்சிப் பீடம் ஏறிய பின், அவர்கள் உரி[மை]களைப் பற்றிக் கவலை கொள்ளாம[ல்] தங்கள் நலனிலேயே அக்கறை காட்[டு]கிறார்களே, ஆட்சியில் அமர்ந்த[வர்]கள்—அவர்களும் இந்த ரகத்தை[ச்] சேர்ந்தவர்கள் தான்.

மக்களுக்காக வாழ்வோம் என்[று] கூறி மன்றம் ஏறின[ர்] அதைக் காப்பாற்றிக்கொள்[ளு]ம் வழி, வகைகளைத் தேடுகின்றன[ர்] அதேபோல்தான் பிரஜேஸ்வர[ரு]ம் கூறுகிறார், தான் சட்டசபை மாடிக்[கு] வர, உதவிய மக்கள் வாக்குரி[மை] என்கிற ஏணியின் படிக்கட்டுகளை[க்] குறைக்கவேண்டும் — அதிகமாக்க[க்] கூடாதென்று! விசித்திரவாதம்...

கடவுள் பேரால் கள்ள மார்க்கட்

27—8—49 தினம் காஞ்சிபுர[ம்] ஆண்டி பிளாக் மார்க்கட்டி[ல்] போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் T. [N.] ராகவாச்சாரியாரும் அவருடை[ய] பார்டியும் லோகல் ரெவன்யூ இன்[ஸ்]பெக்டர் ஜகன்னாத பாபு ஒத்தா[சை]யுடன் காஞ்சிபுரம் அஷ்டபுஜ[ம்] கோயிலின் மணியம் மேல்பார்[வை] செய்யும் அத்தங்கி லக்ஷ்மிநரசிம்[ம] தாத்தாச்சாரியாரை கள்ளமார்க்க[ட்]டில் ரூ 4—11-1க்கு ஒரு மூட்[டை] சிமெண்ட் விற்கவேண்டியதற்[கு] அஷ்டபுஜம்கோயில்உபயோகத்தி[ற்கு] என்று வாங்கி அதை ரூ7-8-0க்[கு] கள்ளமார்க்கட்டில் விற்றதற்[கு] அரஸ்ட் செய்து ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். 102 மூட்டை சிமெண்ட்டைப் பற்றப்பட்டது.

அவரும், 'அவர்களும்'!

"போன தடவை நான் இங்[கி]லாந்து போயிருந்தபோது மவுண்[ட்] பேட்டன் மாளிகையில் தங்கியிரு[ந்]தேன், பாருங்கள்! அப்போது அவர்கள் மாளிகையில் வெண்ணெ[ய்] இல்லை. அப்போது, மவுண்ட் பே[ட்]டன் குமாரிகள் என்னிடம், டப்ளி[ன்] சென்று வரும்பொழுது வெண்ணெய் வாங்கி வரும்படி கூறினா[ர்]கள்" என்று பிரதமர் நேரு கான்[பூ]ரில் ஒரு பொதுக்கூட்டத்தில் வெ[ளி]யிட்டார். இந்தியாவுக்கு அவர் 'பி[ர]தமர்'; ஆனால் அவர்களுக்கோ...

★ மாஜி கடவுள்கள் ★

சி. என். ஏ.

ிரிந்து பரந்து கிடக்கும் விண்,
, கடல், இம் மூன்றும், மனித
தாயத்துக்கு விளக்கம் கிடைக்
 காலத்தில், அச்சம், ஆச்சரியம்
ம் இரு உணர்ச்சிகளைத் தூண்டு
வாகவே இருந்தன. இது இயற்
யும்கூட.

இதென்ன அதிசயமோ நமக்
ன தெரிகிறது!" என்ற பேச்சு,
போதும்,—நவீன உலகில்—பல்
று சம்பவங்களின்போதும், காட்
ின்போதும், பலரால் கூறப்படு
ல்லவா! மனித சமுதாயம் பல
று நூற்றாண்டுகள், பயிற்சி
ற்று, பக்குவமடைந்து, பெரும்
வுக்கு அறிவுத் தெளிவும்
ய்ச்சித் திறனும், பெற்றிருந்
 கூட, இன்னமும் மனித அறி
கு, ஆச்சரியகரமான, விளக்கம்
க்காத பொருளும், காட்சியும்,
க்கத்தான் செய்கின்றன. ஆனால்
த சமுதாயம், நமக்கென்ன,
று இருந்துவிடுவதுமில்லை, நமக்
 புரியவே புரியாது என்று விட்டு
வதுமில்லை. தட்டுத் தடுமாறிக்
ண்டு சிந்தனைப் பாதையில்,
னும் ஓர் அடி எடுத்துவைக்கும்
ற்சியிலேயேதான், ஈடுபட்ட வண்
 இருக்கிறது. இந்த முயற்சி
 தன்னலக்காரர் ஈடுபடார்,
ழை உள்ளத்தார் ஈடுபடமுடி
ாராகின்றனர், சிலர், ஈடுபட்டு,
ழவு சிதையினும், தோல்வி துரத்,
துரத்தி அடித்தாலும், துவண்டு
ாது, ஈடுபட்டு, உண்மைகளைக்
டறிகின்றனர்; அச்சத்தையும்
சரியத்தையும் தந்துவந்த பொரு
 காட்சியும், பிறகு, மனித சமு
த்துக்கு, விளங்கிக்கொள்ளக்
யவைகளாகின்றன.

ிளக்கம் கிடைக்குமுன்பு பலன்
ல, பொருளாலும், காட்சியா
; அல்லவா?

அதோ மூலையில் உள்ள பொருள் என்ன? வளைவாக இருக்கிறது—ஓரளவு பளபளப்பும் தெரிகிறது—ஆனால் என்ன பொருள் என்று விளங்கவில்லை. அருகே சென்று கூர்ந்து பார்த்தால்தானே, என்ன பொருள் என்று தெரியும். போகலாமா, வேண்டாமா? போக முடியுமா முடியாதா? போனால் ஏதேனும் கெடுதி ஏற்படுமோ? நாம்தான் போகவேண்டுமா? வேறுயாராவது கிடைக்கமாட்டார்களா, இந்தக்காரியம் செய்ய—என்ற இவ்விதமான எண்ணங்கள், குடைகின்றன மனதில்.

அந்நிலையில், என்ன பலன் அப்பொருளால்? அது என்ன என்று கண்டறிந்தால்தானே, பயன் படுமா, அல்லவா, என்பதற்கு!

"அதோ பாரப்பா, மூலையில், இருட்டாக' இருக்கிற இடத்தில், ஏதோ ஒன்று, வளைவாக; பளபளப்பாக இருக்கிறதே—தெரிகிறதா?"

"எங்கே?.......ஓ........ஆமாம், தெரிகிறது ....வளைவாகத்தான் இருக்கிறது.... ....பளப்பளவென்றும் இருக்கிறது"

"என்னவென்றே தெரியவில்லையே ......என்னவாக இருக்கும்?...... உனக்குத்தெரிகிறதா?"

"ஏதோ ஒன்று இருப்பதுதான் தெரிகிறதேயொழிய, அது என்னவென்று தெரியவில்லையே......"

"எனக்குந்தான் தெரியவில்லை"

* * *

மனித சமுதாயம், ஆராய்ச்சிப் பள்ளிக்கூடம் அமைக்காதபோது, இதுபோன்ற நிலைதான்—எதைப் பார்த்தபோதும்,—எந்தப் பொருளைப்பற்றியும். பொருள் தெரிகிறது கண்ணுக்கு—பொருள் விளங்குவதில்லை, கருத்துக்கு! பொருள் விளங்காததால், பயன் கிடைப்பதில்லை மனிதசமுதாயம், நஷ்டமடைகிறது, தெளிவு இல்லாததால். நம் வீட்டு மாட்டுத்தொழுவத்திலேயே, ஒரு சிறு கட்டை இருக்கிறது — சிறுமரத்துண்டு — அது என்ன என்பது தெரியாதநிலையில், அதனால் பெறக்கூடிய பலன், கிடைக்காதல்லவா! பிறகு ஒரு நண்பன் பார்க்கிறான், அந்தமரத் துண்டை! அவனுக்குத் தெரிகிறது, அது சந்தனக்கட்டை என்று.—எனவே அதனால் பெறக்கூடிய பலனையும் தெரிந்துகொள்கிறான். அவன் சுயநலக்காரனாக இருந்தால், என்ன செய்வான்? "இந்தச்சிறுவிறகு உனக்கு வேண்டுமா!" என்று கேட்பான்—ஆவலை மறைத்துக்கொண்டு, அலட்சியப் போக்காக. "எனக்கு என்! இது இங்கு நெடுநாளாக இருக்கிறது, இடமடைத்தானாக!" என்கிறான் விளக்கமிலான். சுயநலவாதி, "இதை நான் எடுத்துக்கொண்டு போகிறேன்—வீட்டிலே, ஒரு கதவுக்குத் தாளாக்க!" என்று கூறிவிட்டு, அதை எடுத்துக்கொண்டு போகிறான். என்றைக்கேனும் ஓர்நாள், பூசிக்கொள்ளச் சந்தனம் கொடுப்பான்—பூசிப்பூரிப்படையும்போதுகூட, விளக்கமிலான். சுயநலவாதியின் சூதை அறிந்துகொள்ள மாட்டான்! அறிவீனம் தரும் நஷ்டம்! அதைச் சுயநலவாதி பயன்படுத்திக் கொள்கிறான் தன் சுகபோகத்துக்காக. ஆப்பிரிக்க நாட்டுப் பழங்குடிகள் விளக்கம் இல்லாத காரணத்தால தங்கள் நாட்டிலே கிடைக்கும், வைரங்களை வெள்ளையர்களுக்குக் கொடுத்து, விளையாட்டுச் சாமானும் சோப்பு சீப்பும் வாங்கிக்கொண்டார்களல்லவா! அது

பொய்யின் முன் 'மெய்யன்பர்கள்' கூட்டம்

போல, மனித சமுதாயத்தில், முதலில் விளக்கம் பெறாததால், பயன் கிடைக்காத நஷ்டமும், விளக்கம் பெற்ற ஒரு சில சுயநலவாதிகளால் பெருநஷ்டமும், ஏற்பட்டதுண்டு.

தன்னலமற்றவனாக அந்த நண்பன் இருந்திருப்பானானால், "அடடே! அருமையான சந்தனக்கட்டையை, முட்டாளே! மாட்டுத் தொழுவத்திலே வீசி விட்டாயே" என்று, கூறி, அதன்பயனை விளக்கியிருப்பான்.

அதுபோலவே, மூலையில் தெரியும் வளைவான, பளபளப்பான பொருள் என்ன வென்று தெரியாமல், மனித சமுதாயத்தில் மிகப்பெரும்பாலோர் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், சூதுக்காரர், சுயநலக்காரர், மூளைத்தனர்—இந்த விளக்கமறியாத நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு தங்கள் சுகவாழ்வை அமைத்துக்கொள்ள.

பயஉணர்ச்சியைத் தூண்டமுடியும்அவர்களால்–பேராசைஉணர்ச்சியைத் தூண்டமுடியும்—பித்தராக்க முடியும் அந்த எத்தர்களால்.

"என்னவென்று தெரிகிறதா?" என்று கேட்டஉடனே, "ஆஹா! அருமை! அருமை! நீபாக்யசாலி! அப்பா! அருள்பெற்றவன் நீ! உன் வீட்டிலே, பிரசன்னமாகி விட்டது, தேவப்பிரசாதம்" என்று, ஆவேசம் வந்தவன்போலப்பேசி, மேலும் ஆச்சரியப்படுபவனைப் பார்த்து, "அப்பா! இது, நீ, எப்போது பார்த்தாய்?" என்று கேட்டு, "நான் நெடு நேரமாக பார்த்துக் கொண்டிருக்கிறேனே" என்று அவன்கூற, "இப்போதாவது என்னிடம் காட்டினாயே! மகனே! மண்டியிடு! உடனே மண்டியிடு! உனக்கு இன்னதென்று விளங்காத அப்பொருள், என்ன தெரியுமா? பாம்பு! பயப்படாதே பாம்பு என்ற உடன்! பாம்பு உருவில் பகவான்!" என்று கூற,பகவானாக இருந்தால்கூட உரு, பாம்பு ஆகையால், என்ன ஆபத்தோ, என்று அவன் அஞ்ச, "கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்!பாம்பாக வந்துள்ள பகவான், உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவார்-மூடு கண்களை!" என்றுகூறி, அவன் கண்மூடியது கண்டுகளித்து, திறந்ததும், "தேவனின் திருவருளே அருள்! வா, அப்பா, பயப்படாமல் வா, பகவான், பாம்பு உருவில் இருந்து இப்போது இரும்புவளையம் போன்ற உருவம் எடுத்துள்ளார்"—என்றுகூறி, வளையத்தைத்தொட்டுக் கும்பிட்டுக்காட்டி, அவனை 'பாம்புக் கோயில்' கட்டச்செய்து, அதன், முதல் பூஜாரியுமாகிவிட முடியும்! மனிதசமுதாயத்தின் விவரமறியாத பருவத்தின்போது, அற்புதங்களும், அவைகளின்பேரால் அமைந்த பூஜா இடங்களும், அவற்றை நடத்த ஏற்பட்ட பூஜாரிகளும், எண்ணற்ற அளவு!

கண் எதிரே, மூலையில்கிடந்தவளையத்துக்கே, விவரம் இல்லாதபோது, மனித சமுதாயம் அஞ்சி, தந்திரக்காரனிடம் தாசனாகிட வேண்டி நேரிட்டதென்றால், விஞ்ஞானத்தின் துணைகொண்டும் இன்னமும் முற்றும் விளங்கிக்கொள்ளமுடியாத நிலையில் உள்ள, விண், மண், கடல், என்பவைகளிடம், ஆதிகாலத்தில், எவ்வளவு அஞ்சியிருக்கவேண்டும், எவ்வளவு அடிமைத்தனம் வளர்ந்திருக்கவேண்டும்!

அதே இயற்கையின் உட்பொருள் இன்று பெருமளவுக்கு மனித சமுதாயத்துக்கு, ஆராய்ச்சியின் பயனாக விளங்கிவிட்டதால், எவ்வளவுபயன், ஏற்பட்டிருக்கிறது!

* * *

விவரமறியாத நிலையில் விண்ணிலே, வீற்றிருந்த ஜூவசின், தம்பி தான், பாசிடன் — கடலுக்கு அதிபதி! காற்றுக்குக் காவலன்! அலை கடலே அவன் அரண்மனை! அண்டத்தைக்கட்டிக் காக்கும் மூலதெய்வங்களில் பாசிடனும், முக்கியமானவன். கிரேக்கநாட்டவர், பாசிடனை, மிக மிகப் பயபக்தியுடன் தொழுது வந்தனர். அவர்களின் பயபக்திக்குக் காரணமும் இருந்தது.

கிரேக்கர்கள், கடல்மார்க்கமாகச் சென்று வாணிபம் நடாத்துபவர்—அவர்கள், வாழ்க்கையில் பெரும் பகுதியை, கடலின்மீதே போக்க வேண்டிய நிலையில் இருந்தனர். கடலைக்காணும்போதெல்லாம், அவர்கள், உள்ளத்தில், ஆயிரம் எண்ண
கள் கூத்தாடும்! இது எவ்வள
பெரிதோ? எங்கு ஆரம்பமாகி எ
முடிகிறதோ? அலையின் காரண
என்னவோ? இவ்வளவு நீரும், ம
யினாலேயே நிரம்பிற்றோ, மழை
பயிர்பச்சைக்கும், மக்கட்கும் ப
படும்போது, அது கடலில் சேர்
தும், கரிப்பாகிவிடும் காரணம் எ
னவோ? இதை முதன் முத
வெட்டின மகாவீரன் யாரோ? இ
கடல், கலங்களைச் சுக்குநூறுக்
அலைகளைக்கிளப்புகிறதே! காட்ட
கரைபுரண்டாலே, ஊர் அழிகிற
இந்தக்கடல், பெரும்வலிவுள்ளது
இது கிளம்பினால், கட்டுக்கடங்கா
கரையோடு நில்லாது, ஊருக்கு
நுழைந்தால், என்ன ஆகும்? என
எண்ணினான்—அச்சத்தால் நடு
னான்—ஆவலும் நிரம்பிற்றுஉள்ள
தில், இதன் ஆதி அந்தம் அ
வேண்டும், என்ற ஆவல்.

கடல்! அலை! புயல்! இவைகளை
கண்டு கண்டு, மனிதனின் மனதி
யும் எண்ண அலைகள் எழும்ப
யின! பல்வேறுவிதமான கருத்து
—தெளிவான உருவில் அல்ல
குழப்பமான நிலையுடன்.

இப்படி இருக்குமா! — இது
லிருக்குமா!—என்று ஏதேதோஎ
ணினான்—கற்பனை உள்ளம் பை
வன் கதை கட்டிவிடும் காலம்வ
அந்தக் கதை கட்டுவோனி
சிந்தனையில் பிறந்தான் பாசிடன்.

இவ்வளவு வலிவுள்ள கடலைக்
டிக்காத்து, அலைகளை எழு
எழுப்பி அடக்கி, கரையைக்கட
கடல், உலகை அழிக்காமல் பு
புகட்டிட, ஒருதேவன் இருந்
வேண்டுமல்லவா! அவன் சாமா
வலிவும், மகிமையும், கொண்
னாக இருந்தால் போதாதே! அ
ஜூவஸ்போலவே மூலதெய்வமா
தான் இருக்கவேண்டும்—என்று
பனை உள்ளம் படைத்தவன்எண்
பாசிடனைப் பெற்றெடுத்தான்
வந்துவிட்டான் தந்திரம் தெரி
மதவாதி, பாசிடனை — கற்பனைய
வளர்த்திட — எழும்பின கோ
கள்—கூடின பக்தர்கள்—குவிந்
காணிக்கை! பொய்யின் மு

(13-ம் பக்கம் பார்க்க)

யானை புகுந்த வயல்!

"பத்திரிகைகளுக்கு விளம்பரவரி திக்கத் தீர்மானித்திருக்கிறீர்களே, து எந்தக் கொள்கையை அடிப் டையாகக் கொண்டது" —என்று,

சென்னை துரைத்தனத்தின் பாருளாள அமைச்சரை, மாகாணக் ல்லூரி மாணவனொருவர், கேட் ர்—அமைச்சர் கல்லூரி சென்று றிவுரை ஆற்றுகையில்.

அமைச்சர் அளித்த பதில், ணவர்களை மட்டுமல்ல, அவர் ளுக்குக் கல்வி புகட்டும் பேராசிரி ர்களைக் கூடத் திகைக்க வைத் ருக்கும்.

"கொள்கையா! எல்லா வரிகளுக் ம்உள்ளகொள்கைதான் இதற்கும். ற்பனைவரி என்ன கொள்கையின் துபோடப்பட்டிருக்கிறது? மற்றவரி ள் என்ன கொள்கையின்படிவிதிக் ப்படுகின்றன? அதேபோலத்தான் துவும். சர்க்காருக்குப் பணம் வண்டும்—பொது நன்மைக்கான ாரியம் பலசெய்ய—பணம்டேறவே ரி விதிக்கிறது சர்க்கார்!" என்று திலளித்தாராம்.

பத்திரிகைகளுக்கு விளம்பர வரி பாடவேண்டுமா, கூடாதா, என் துபற்றியல்ல நாம் இப்போது வனிப்பது—அமைச்சரின் அபூர்வ ன பதில் இருக்கிறதே, அது மக் ளாட்சிக்குரிய மாண்புக்கு ஏற்றது ாறு, என்பதையே, கவனிக்கிறோம்.

"இந்த வரி விதிக்கிறீரே, எந்தக் காள்கையின் மீது?" என்று மாண ன், கேட்டது, தேவையற்ற கேள்வி மல்ல, தெளிவற்ற கேள்வியுமல்ல. வ்வொரு வரியும் ஏதேனும் ஓர் டிப்படைக் கொள்கையைக் காண்டே, விதிக்கப்படும். இந்த றையைமட்டுமல்ல, இந்த முறை ன்வளர்ச்சியை, எந்தெந்தக்காலத் ல் எவ்வெவ்விதமான வரிமுறை ருந்ததென்பதை, இவைகளிலே, ந்தமுறை சிறந்தது என்பதை எல் ம், எடுத்துரைக்கும் ஆசிரியர்க ம், கேட்டு விளக்கம்பெறும் மாண வரும், கூடியிருந்த மன்றம் அது. எனவேதான், மாணவர், வரி விதிப்புக்குக்கொள்கையுண்டே, இந்த வரி எந்தக்கொள்கையின்படி விதிக்கப்படுகிறது என்று கேட்டார். அவர் படித்த டால்டனும், வரி விதிப்புக் கமிட்டி அறிக்கை ஏடும், அவருக்கு இக்கேள்வியைக் கேட்கத்தூண்டின. அமைச்சர், ஆசிரியர் அல்ல, மாணவராக இருந்தவர், ஒரு காலத்தில், அப்போதும், 'பாரதமாதாவின் சேவை'க்காக அதிக நேரம் செலவிட்டு விட்டவர்—எனவே, அவர், வரி விதிப்புக்குக் கொள்கை என்ன! என்று கேலியாகக் கேட்பவர்போலப் பேசிவிட்டு, ஆப்பம் விற்கும் கிழவிக்கும் தெரிந்த ஒரு கருத்தைக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

வரி விதிப்பது, சர்க்காருக்குப் பணம் தேவைப்படுவதால்—சர்க்காருக்குப் பணம் தேவைப்படும் காரணம், பொது நன்மைக்கான காரியம் செய்வது.

இது, யாருக்கும் புரியாத புதிர் என்று எண்ணிக் கொண்டார் போலும், அமைச்சர்!

சர்க்காருக்குப் பணம் தேவை, ஆனால், ஏன் அந்தச்சர்க்கார், வியாபாரிபோல, ஏதேனும் தொழில் நடத்தி இலாபம் சேர்த்துப் பணம் திரட்டாமல், வரி விதிக்கிறது? சிரமம் எவ்வளவு, வரிவிதிப்பதில்! அதிர்ப்தி எவ்வளவு அதனால்! கேள்விகள் பலப்பல! இவ்வளவு தொல்லைகள் இருந்தும்கூட, ஏன் சர்க்கார், வரி வசூலித்து, பொது நன்மை புரியும் காரியம் செய்கிறது?

அமைச்சர் அதற்கெல்லாம் பதிலளிக்கமாட்டார்!

மந்திரிக்கு அழகுவரும் பொருள் உரைத்தல், தானே! வரும் பொருள்! எவ்வளவு பொருள் சர்க்காருக்கு வரி மூலம் கிடைக்கிறது, என்பதைத்தான் இந்த மந்திரிகூறுவார்!! பொருள் பெறுவதிலே, பலமுறைகள் உண்டு; அவைகளிலே ஒவ்வொரு முறைக்கு ஒவ்வொரு விதமான விளைவு ஏற்படும், இவைகளைச் சீர்தூக்கிப்பார்த்து, வரி விதிப்பு முறையினால், சமுகம் எந்தெந்த வகையிலே, பாதிக்கப்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அந்த அனுபவத்துக்குத் தக்கபடி, முறைகளை மாற்றுவதும் புதுப்பிப்பதும், ஒழுங்கு படுத்துவதுமாக, இருப்பதுதான் நல்லாட்சிக்கு அடையாளம், மக்களாட்சியிலே இதுதான் மாண்பாகக் கருதப்படும், என்ற அடிப்படை உண்மையை மறந்தார் அமைச்சர்! கேள்வி கேட்டவர் மாணவர்—அமைச்சர், பொருத்தமும் பொருளும் உள்ள பதில் அளிக்காவிட்டாலும், அமைச்சர் அமைச்சர்தானே!! பதவியா பறிபோகும்? இதனால்?

வரி ஏன்? செலவுக்கு!!—எவ்வளவு சுருக்கமானபதில்!

கொள்ளை அடித்த மன்னர்கள், படைத்தலைவர்கள், கதறும் மக்களைப்பார்த்து, "ஏன் இப்படிக் கதறுகிறீர்கள், கசடர்காள்! கொள்ளை எதற்கு அடிக்கிறோம் என்பதறியாமல் புலம்புகிறீர்களே, கொள்ளை அடிப்பது பணம் சேர்க்க! பணம் சேர்ப்பது, செலவிட! செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுவது, படைகளுக்குச் சம்பளம்தர, குதிரைகளைப்பராமரிக்க, போர்க் கருவிகள் வாங்க, புதுப்பட்டாபிஷேகத்துக்குப் பொன்னுடை வாங்க, இப்படிப் பலவகையான காரியம் இருப்பதனால்தான். பொதுமக்களாகிய உங்களுக்கும்தான், செலவிடப்போகிறோம், இந்தப்பணத்திலிருந்து, என்றுகூறினதில்லை — எனினும் அவர்களின் கொள்ளை அடிப்புக்கொள்கை இதுதான். மக்கள், இதைக் கொள்கையாகக் கருதினதுமில்லை, அந்தக் கொடியவர்களை, மன்னர்களென்றும் மதித்ததில்லை, மனித சமுதாயத்துக்கு ஏற்படும் கொடு நோய்களிலே ஒன்று என்றே எண்ணினர்.

உண்மையாகவே ஒரு மன்னன்

காட்டாறு ஒன்றுக்குப் பாலம் கட்டும் கருத்துடனேயே, பணம்திரட்ட எண்ணி, அதற்கான விளக்கமும் வேண்டுகோளும் தரும், ‘அற்ப காரியத்தை’ அரசனாகியவன் செய்ய வேண்டியதில்லை என்று நினைத்து, கொள்ளையிட்டுப் பணம் சேர்த்து; பிறகு, அப்பொருளைக் கொண்டு புதிய பாலம் கட்டினாலும், மக்கள், கொள்ளையிட்டவனைக் கொடியவன் என்று தான் கூறுவரேயன்றி, போற்ற மாட்டார்கள்.

ஏன் இதைக் கூறுகிறோமென்றால், மக்களைப்பூச்சி புழுக்களெனமதித்த மமதையாளர்கள், நடத்திய துரைத்தனத்திலே, கொள்ளை அடிப்பது கூட, சர்க்காரை நடத்திச் செல்லும் காரியத்துக்காக, பணம் சேர்ப்பதற்குரிய சாதனமாகக் கருதினர், ஒரு காலத்தில்.

வரிவிதிப்பது, என்ற முறையே, வெறும் பலத்தையும் அதிகாரத்தையும் கொண்டதாக அரசு இருத்தலாகாது, மக்களின் அன்பையும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொண்டதாக இருக்கவேண்டும், என்ற புது அறிவு தோன்றியதனால் ஏற்பட்டதுதான். அதற்கு முன்பெல்லாம், அரசாள்வோன்விரும்பிய போதெல்லாம், பணம் தரவேண்டும் மக்கள், தரமறுத்தால், தண்டனைபெற வேண்டும். மன்னனுக்குப் பெண் தர, அங்நாட்டரசன் மறுத்தான்—போர் மூண்டுவிட்டது — போரிலே வெற்றி பெற்று, அங்க நாட்டு அழகியை அடிமையாக்கி, வாகை சூட வேண்டும் மன்னன் — இதற்கான செலவுக்கு, மக்கள் பணம் தரவேண்டும்—தந்தனர். வேறோர் மன்னன், தன் இளைய மனைவியின் விருப்பத்தின்படி, எந்த ராஜ்யத்திலும் இல்லாத எழிலுடன் ஓர் வசந்தமாளிகை கட்ட எண்ணுகிறான்-பணம் வேண்டும்—மக்கள் தந்தாக வேண்டும்—தந்தனர்.

அது மன்னன், மக்களை ஆள்பவனாக மட்டுமல்ல, மகேசனின் மைந்தனாகக் கருதப்பட்ட நாட்களில்.

பிறகு, மன்னனே கூட, “ஆறிலோர் கடமை வாங்குதல்” போன்ற, ஏதேனும் ஓர் வரைமுறையைக் கொள்ளவேண்டி நேரிட்டது. ஆனால் எந்த எதேச்சாதிகாரியும், ‘வரி போடுவது பணம் சேர்க்க’ என்று கூறினதில்லை.

மக்களாட்சியிலே உள்ள அமைச்சர்தான், மட்டற்ற தைரியத்துடன் பேச முடிகிறது.

வரி விதிக்கத்தான் வேண்டும்—பணம் இருக்கத்தான் வேண்டும் சர்க்காரிடம்—அதைக் கொண்டுதான், பல பொது நன்மைகளைச் செய்ய முடியும்-இதை அறியாதார், யாருமில்லை. மந்திரிமார்கள், தத்தமது பதவிக் காலத்தில், மக்களின் நலனுக்கானவற்றைத் தத்தமது சொந்தச் சொத்திலிருந்து செலவு செய்யும் ‘தர்மப் பிரபுக்களாக’ இருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவுமில்லை, படிக்காசு பெறப் பதிகம் பாடிடும் காலமும் அல்ல இது என்பதையும் அறிந்திருக்கிறோம். எனவே கேள்வி கேட்ட மாணவர் உட்பட, எல்லோரும், சர்க்காருக்குப் பணம் வேண்டும், அதற்காகவே, வரி விதிக்கின்றனர், என்ற இந்த அரிச்சுவடியை அறியாமலில்லை. அமைச்சர் கொஞ்சம் ‘விவேக சிந்தாமணி’ அளவுக்காவது செல்லமாட்டாரா, என்ற ஆசைதான்! அதற்கெல்லாம் வேறு ஆசாமியைப் பாரப்பனே! -நமக்கு இந்த அரிச்சுவடிதான் தெரியும், என்கிறார் போலும் அமைச்சர்.

நல்ல அமைச்சர்! நல்ல விளக்கம்!!

“வரி தேவைதான் அமைச்சரே! ஆனால், ஒரு வரிமுறைக்கும், இன்னோர் வரிமுறைக்கும் விளைவிலே வித்யாசம் உண்டே, அதைக் கவனித்து, வரி விதிக்கிறீர்களா?” என்பதுதான் கேள்வி.

அடுப்பெரிக்க விறகு வேண்டும், நிச்சயமாக. அதற்காக, வீட்டிலே உள்ள, தூண்களையும், சரங்களையும் வாசற்படிகளையும் எடுத்தா, எரிப்பது! எரிக்கலாமா என்று கேட்டால், விறகுவேண்டும் அடுப்பெரிக்க அடுப்பெரிவது சமயலுக்காக! சமயல் உனக்குத்தான், என்றுபதிலளிப்பது பித்தர் பட்டியிலும் கிளப்ப முடியாத பேச்சல்லவா?

வரி விதியுங்கள்—ஆனால் யாருக்கு—எவ்வளவு—எப்போது — எந்த முறையில்—இவைகளைக் கவனிக்க வேண்டுமே! இதைத்தான், வரி விதிப்புக்குள்ள கொள்கை என்பர் அறிந்தோர். மாணவர் இதனால் தான் அந்தக் கேள்வி கேட்டார்.

நாட்டிலே பெரும்பாலோர் ஏழைகள்—ஒரு சிலர் செல்வான்கள். சர்க்காருக்குப் பணம் வேண்டும், நா[illegible]டுப் பாதுகாப்புக்கு, நாட்டு ஆட்[illegible] நடப்புக்கு, நாட்டுவளம் பெருகு[illegible]தற்கு; மக்களின் வாழ்வு துலங்கு[illegible]தற்கு—இதற்கு வரிபோடவேண்டு[illegible] ஆளுக்கு ஆறு ரூபாய் என்று வ[illegible] விதிப்பதா! — முறையாகுமா, அ[illegible]லது போதுமா?

போலீசும் பட்டாளமும், ரோடு[illegible] ஆறும், விளக்கும் படிப்பும், எல்லோ[illegible]ருக்கும் தானே தேவை, இந்த வச[illegible]களை எல்லோரும் தானே சர்க்கா[illegible] மூலம் பெறுகிறார்கள், எனவே சர்[illegible]காருக்கு இவைகளுக்காக ஆகு[illegible] செலவை, எல்லா மக்களும் தானே[illegible] சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்[illegible] வேண்டும். எனவே, மொத்த[illegible] செலவு எவ்வளவு, மொத்[illegible] ஜனத்தொகை எவ்வளவு என்[illegible] கணக்கிட்டு, விகிதாச்சாரம் வ[illegible] விதிப்பதுதான் சரி, என்று வாதி[illegible]டால், ஏழை வாழ முடியுமா? ஒ[illegible] சர்க்காரின் செலவு 10 கோ[illegible] ரூபாய், ஆண்டுக்கு. அங்குள்ள[illegible] மக்களின் தொகை 1 கோடி, எனவே[illegible] கணக்குப்படி, ஆளுக்குப் பத்[illegible] ரூபாய் வரி தர வேண்டும், என்[illegible] வரி விதிப்பு முறை இருந்தால்[illegible] விளைவு எவ்வளவு விபரீதமா[illegible] இருக்கும்.

சந்தனக் கட்டை வெட்டி ஜீவி[illegible]கும் கூலியும் பத்து ரூபாய் வ[illegible] கட்டவேண்டும், சந்தனக் கட்டை[illegible] வியாபாரம் செய்து, சரிகைக் கு[illegible]லாய் தரிக்கும் சீமானும், ‘கோடீ[illegible] கோமான்’ போலவே, பத்தே ரூபா[illegible] தான் வரியாகக் கட்டவேண்டும்[illegible] என்று வாதாடினால், மக்கள், ‘கடு[illegible] புலி வாழும் காடு நன்றே’ என்[illegible] பாடி, ஓடவேண்டியதுதானே!

இப்படி யாராவது ஒரு பைத்ய[illegible]கார வரி விதிப்பு முறையை[illegible] கொள்வார்களா, வாதத்துக்கா[illegible] இது ஓர் வம்புப் பேச்சு, என்[illegible] எண்ணவேண்டாம்.

தலைவரி, (Poll Tax) என்ற வரி, இதேகொள்கையின்படி விதிக்கப்பட்டதுதான்— பல அரசுகளில் — நெடுங்காலம் இந்தமுறையின் அநீதி[illegible] விளக்கப்பட்டு, பிறகே, இம்முறை[illegible] ஒழிக்கப்பட்டது. ஒழிக்கப்படாத[illegible] முன்பு, இந்த அநீதியான வரி[illegible] முறைக்கு, அந்தநாள் கோபாலர்கள்[illegible] இந்தநாள் கோபாலர்போலவேதான்[illegible] விளக்கம் தந்தனர், “அரசு நடத்தப்[illegible]

ம் வேண்டும்—பணம் பெற வரி
டுகிறோம்" என்றனர்.

க்களின் மதியும் துலங்கி, ஆட்சி
றைகளும்மாற்றி அமைக்கப்பட்ட
துதான், கருத்தற்ற வரி விதிப்
, சரியல்ல, என்ற எண்ணம்பிறந்
. புதியஏற்பாடு தீட்டப்பட்டது.
ங்கிக் கொள்ளக்கூடியவர்கள்மீதே
பளுவு விழவேண்டும் — மற்ற
ள்மீது அவர்களின் தாங்கும்
திக்கு ஏற்ற அளவுவரியே இருக்க
ண்டும் என்ற எண்ணமும் ஏற்
ம் தோன்றின.

ரு லாரிநிறையச் சாமான் ஏற்ற
—ஆனால் ஏற்றப்படும் சாமா
, எடையைக்கவனிக்க வேண்
மா? வைக்கோலாக இருந்தால்
ன, விறகுக்கட்டையாக இருந்
என்ன, கரும்பாக இருந்தால்
ன, இரும்பாக இருந்தால்என்ன,
ற முறையிலேயா,சாமானைஏற்று
கள்! லாரி, நிலைக்குமா — சாமா
சேதப்படாமலிருக்குமா!கோபா
இன்னம் லாரி மந்திரியாகவில்லை,
னும் மோட்டார் மந்திரியல்லவா
ர், இதுபற்றிச் சிந்தித்தால்
ங்குமே, என்பதற்காகக் கூறி
ம்.

ங்கும் சக்தி—என்றால், இப்
ாதைக்கு என்றுமட்டுமல்ல
ருள். ஒரு ஆண்டு, இரண்டு
டு, தாங்கும்சக்தி இருந்து விட்
போதாது—தாங்கும் சக்தி,
து, நீண்ட கால நிலைமையை
கூட்டியே கணிக்க வேண்டிய,
க்கமான விஷயம்

ாட்டார் மந்திரியாருக்கு, இது
யும் என்று நம்புகிறோம்—
டாருக்கு, தேய்வு, சேதாரம்,
வைகள் உண்டு—மனிதருக்கு,
மிக மிக அதிகமாக உண்டு—
டாரின் வருமானத்திலிருந்து
வு சேதாரத்துக்கு ஒருதொகை
குவதுபோல, மக்களின் வரு
த்திலும், வரி போக, வாழ்க்
செலவு போக, 'தேய்வு சேதா
க்கு', அதாவது குடும்பத்தில்
ாய் தேடும் பொறுப்பும் பருவ
உள்ளவர்கள் ஏற்படாமல்,
கும் வருவாய் தேடும் சக்தி
ந்த நிலையின் போதுள்ள
க்காலஇடர்ப்பாடு,தள்ளாமை,
கமான அளவு கிடைக்காம
பது ஆகியவைகள் உண்டே,

அதற்காக, ஒரு அளவு 'சக்தி'யைச் சேகரம் செய்து வைக்கவேண்டும்.

இவைகளை எல்லாம், நுண்ணறிவுடன் ஆராய்ந்து பார்த்துத் தான் வரி விதிப்பு முறையை வகுக்க வேண்டும். பணம் வேண்டும், வரி கொடு! பசிக்கிறது, சோறு போடு! என்பதல்ல, பக்குவம் அறிந்தவர்களின் பரிபாலன முறை.

பணம் வேண்டும் வரி கொடு, உன்னிடம் வாழ்க்கைச் செலவு போக, தேய்வு நிதி போக, மிச்சம் இருக்கிறது, தாங்கும் சக்தி இருக்கிறது, எனவே, நீ மற்றவர்களைவிட அதிகம் கொடு, என்று இடமறிந்து கேட்க வேண்டும் — காலமும் அறிந்து கேட்க வேண்டும்—கேட்கும் வித மறிந்தும் கேட்க வேண்டும்.

இவைகளிலே ஒன்றையாவது அமைச்சர் சிந்தித்ததாகத் தெரியவில்லை. சிந்தித்திருந்தால், விற்பனை வரிக்கு என்ன கோள்கை? அதே போலத்தான் இதற்கும்? என்று கூறியிருப்பாரா!

விற்பனை வரி, ஏழை மக்களை எவ்வளவு வேதனைக்கு உள்ளாக்குவது! தலைக்கு ஒரு ரூபா வரி என்பது போல, வாங்கப்படும் சாமானுக்கெல்லாம், வரி வாங்குகிறவர் ஆலை முதலாளி அம்பலவாணப் பிள்ளையாக இருந்தாலும் சரி! அவரிடம் கூலியாக இருக்கும் ஆறுமுகமாக இருந்தாலும் சரி! இது தான் முறையா!

பொதுவாகவே, பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி, ஏழையைத் தான் கெடுக்கும், அழுத்தும். இது அமைச்சர் அறிய மறுக்கும் பாடம்! மாணவர், படித்தாக வேண்டிய பாடம்! வாழ்க்கையில், நித்த நித்தம், மக்கள் பார்க்கும் பாடம்! இந்த விற்பனையைப் போடத்துணிந்தார்களே, மக்களாட்சியினர். போட்டது அத்தருக்கும் மோட்டாருக்கும், ஆர்கண்டி துணிக்கும் போட்டால், ஏழைக்குக் கேடு இராதே! உணவுக்கும் உடைக்கும் போடப்பட்டிருக்கிறதே!! சரியா? சமுதாய நலனுக்கு ஏற்றதுதானா! ஏழையின் வாழ்விலே, பள்ளம் படுகுழி எழச் செய்துவிட்டு, வரிமூலம் பணம் திரட்டி, செல்வவானின் மோட்டார் சொகுசாகச் செல்வதற்குச் சிமிட்டி ரோடு போடுவதா, நாட்டிலே சிறப்பும் உண்டாக்கும்! பகையும் அமளியும்உண்டாக்கும், பட்டாளத்துக்கு வேலை கொடுக்கும், திட்டமாயிற்றே இது. இதையெல்லாம், அறிந்ததால்தான் மாணவர் கேட்டார், வரி விதிப்புக்கு என்ன கொள்கை என்று! அமைச்சரின் பதிலில், நகைச்சுவை இருந்திருக்கக் கூடும், ஆனால் நல்லாட்சியின் மணம் காணோமே!

வரி விதிபபோம், செலவு இருப்தால்—என்பது தானா, இந்த ஆட்சியின் திட்டம்? வேறு, கொள்கை, முறை, வேண்டாமா? தீர்மானித்து விட்டார்களா, இதே முறையில் ஆட்சி நடத்த! அப்படியானால் மக்கள் வாழ்வுக்கு, நிம்மதி இல்லை, நிலை இராது, வளம் வராது—ஆம்!—நிச்சயமாக ஏற்படாது.

வரி விதிப்பு முறையும், அதைச் செலவிடுவதிலே உள்ள வகையும் தான், இன்று ஆட்சியின் போக்கை, தரத்தைக் காட்டக் கூடிய அடையாளச் சீட்டுகள். அமைச்சர் கோபாலர், இவைவேண்டாம் என்று எண்ணுகிறார்—இந்த மனப்பான்மை மக்களுக்குத்தெரியாது தெளிவாக—தெரிவிக்கப்பட்டால், இப்படிப் பட்ட அமைச்சர் நமக்கு வேண்டாம் என்று அவர்கள் தீர்மானிப்பர்!

ஏதோ ஓர் வரி போடுவோம், என்னவகையான வரி, என்ன முறை கொண்ட வரி, என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது என்று அமைச்சர் இருந்துவிடலாம், அலட்சியமாக, ஆணவத்தோடு, வாதாடவும் செய்யலாம். ஆனால் மக்கள், யாரோ அமைச்சராக இருந்து போகட்டும், நமக்கென்ன, என்று இருந்துவிட முடியாது. பாதிக்கப் படுபவர்கள், மக்கள்—மந்திரிகளல்ல! வரியினால் வேதனைப்படுவோர், வறண்ட தலையினர், இருண்ட வாழ்வினர்—அவர்களின், 'தீர்ப்பு' அமைச்சரை ஆக்கும், அழிக்கும், வல்லமை வாய்ந்தது.

வரி முறை எப்படி இருக்க வேண்டும், மக்களும் பாதிக்கப்படாமல், சர்க்காருக்கும் பணம் தட்டுப்படாமல் இருக்கவேண்டுமானால், என்பதைக் கண்டறிவது, கஷ்டமான காரியந்தான் ஆனால், அந்தக் காரியம் தான் அமைச்சர்களின் கடமை!

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு
ஞாயிறு] 4—9—49 [காஞ்சி

பாராட்டுகிறோம் ......எனினும்!

பலமான ஒரு அடி, கன்னத்தில்! அடிபட்டவன் அழகான ஓர் புன்னகை புரிந்தான். இரண்டாவது அடி! மீண்டும் ஓர் புன்னகை—ஆனால் பொலிவு இல்லை! மூன்றாவது ஓர் அறை! அடிபட்டவனின் கரம், அடித்தவனின் பிடரியில்—அடுத்த விநாடி, அடித்தவன் கீழே உருண்டான்.

இப்படி ஓர் காட்சியைக்கண்டிருக்கிறோம்—நகைச்சுவைப்படக் காட்சியொன்றில்.

அட்டகாசக்காரன், அடிக்கும்போது, "போகிறான், போ," என்று கருதினான், பலசாலி! இதை, 'சொரணைகெட்ட' தனம் என்று எண்ணிக் கொண்டான் அட்டகாசக்காரன், கீழே வீழ்த்தப்படும் வரையில், இதே எண்ணம்தான் அவனுக்கு!

சென்னை நகரம், யாருடையது, என்பதுபற்றி, இதுபோலவே, தமிழர்கள் ஏதோ, 'சொரணையற்று' இருப்பதாகச் சில அட்டகாசக்காரர்கள் எண்ணிக்கொண்டு, ஆளுக்கோர் யோசனையும், வேளைக்கொரு திட்டமும் வெளியிட்ட வண்ணம் இருந்து வந்தனர்.

இந்தத் திட்டங்களிலே எல்லாம் மிகமிக ஆபத்தானது, சென்னை, தமிழருக்கா, ஆந்திரருக்கா, என்பது பற்றிச் சிக்கல் இருப்பதால், சென்னையை, டில்லியிடம் தந்துவிட வேண்டும் என்பதுதான்.

பெரும் ஆதிக்கப்பசி கொண்டலையும், வடநாட்டு ஏகாதிபத்யப் போக்கினர் சிலர், இப்படிப்பட்ட சமயங்களை எல்லாம் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, 'குரங்கு மத்யஸ்தம்' என்பார்களே, அந்த முறையைக் கையாண்டு, கொழுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

பன்னெடுங்காலமாக, மாகாண சுயாட்சி பற்றி, புகழ்பாடி வந்தவர்கள், இன்று, அதனைக் கேலிக் கூத்தாக்கத் துணிந்து, எதற்கும், மேலிடத்தை எதிர்பார்த்திருக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தி வருகின்றனர்.

மனுசுபேதார் எனும் 'மேதை' வேகமாக, மேலேறிப் போய்விட்டார், இந்த எதேச்சாதிகார ஏணியில். சென்ற கிழமை, அவர், மாகாண ஆட்சி மன்றங்களேகூடத் தேவையில்லை, சகலமும், 'டில்லி பாதுஷா' விடமே விட்டுவிடுவது தான் நல்லது என்று பேசியுமிருக்கிறார்.

இந்த ஏற்பாடுகள், பேச்சுகள், எண்ணங்கள், எங்கே கொண்டுபோய் விடும் என்பதைப்பற்றிச் சிந்திக்க மறுப்பவர்களை, 'நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள்' என்று நமது பின் சந்ததி நிச்சயம் கூறப்போகிறது. இப்போது வேண்டுமானால், இளித்தவாயர்களைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால், அவர்கள், 'தேசோத்தாரகர்கள்', 'பாரத்வர்ஷ ரட்சகர்கள்' 'அகில இந்திய சிருஷ்டி கர்த்தாக்கள்' என்று, அர்ச்சிக்கப் படலாம்.

சூட்சம புத்தியோடு செய்யப்பட்டு வரும், இந்த ஏற்பாடுகளைக் கண்டு கொள்ளாமல், நமது மாகாணத்திலிருந்து, அரசியல் நிர்ணய சபை சென்றுள்ள உறுப்பினர்கள், மூன்றும்அடி விழுகிறவரையில் சுறுசுறுப்பற்று இருந்தவன்கதைபோலக் கண்மூடி மௌனியாகி இருந்து வந்தனர்.

'சுருக்'கெனத் தைக்கக்கூடிய விதமான, 'பிரச்னை' கிளம்பிய பிறகே, அவர்கள், துடித்தெழுந்துள்ளனர்.

தாமதித்துக்கிளம்பினாலும், கிளம்பினரே இப்போதாகிலும் என்ற களிப்பு நமக்கு. பாராட்டுகிறோம், அவர்களை.

சென்னையை ஆந்திரரிடமும் விடமாட்டோம்.

சென்னையைத் தமிழகத்திலிருந்து பிரிக்கவும் அனுமதிக்க மாட்டோம்.

என்று தெளிவாகவும் வீரமாகவும், தெரிவித்துவிட்டனர்.

சென்னையை, ஆந்திரர் கேட்பது, எந்த விதமான நியாயத்துக்கும் ஏற்றதல்ல என்பது நன்றாகத் தெரிந்தும், டில்லி தேவதைகள், இ[...] வளவு தூரம் அதை வளரவிட்[...]தற்குக் காரணமே, சிக்கல் பல[...]னால், 'இருவருக்கும் வேண்டாம்; ஆந்திரரிடம் இருந்தால் தமிழரு[...]க்குக் கோபம்; தமிழரிடம் இருந்தா[ல்] ஆந்திரருக்குக் கோபம், என வே[...] சென்னையை, டில்லியிடம், விட்டு விடுங்கள், என்று கூறிக் காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்ப[து]தான்.

இந்தப் போக்கு, கலப்படமற்ற சர்ச்சிலிசம் என்பதை, நாட்டு வி[டுதலை]ப் போரில் ஈடுபட்டவர்கள் அறியாதிருக்க முடியாது!

எனினும் அவர்கள், "கட்டை[...] கலித்துறை" பாடிக்கொண்டு கால[...] கடத்திவிட்டார்கள்.

சென்னையை, டில்லியின் நே[...]யான ஆட்சியின்கீழ் கொண்டுவரு[ம்] திட்டம் தயாரிக்கப்படுகிறது எ[ன்]பது தெரிந்தபிறகு, அரசியல் நி[ர்]ணயசபை சென்றுள்ள, தமி[ழ] உறுப்பினர்கள், துடித்தெழுந்[து] அறிக்கைவிட்டுள்ளனர்.

இந்த அறிக்கை, சூட்சித் தி[ட்]டங்களுக்குத் தரப்படும் மு[...] தாக்குதல். துணிந்து, இதனை வெ[ளி]யிட்டவர்களைப் பாராட்டுகிறோ[ம்]. எனினும், இதுநாள் வரை இருந்[து] வந்ததுபோல, அவர்கள் அசட்[...]யாக இராமல், தமிழர்கள், சென்[னை] சம்பந்தமாக, எவ்வளவு உறுதி[யு]டன் உள்ளனர் என்பதை, காங்[கி]ரஸ் மேலிடத்தவர்கள், உணரு[ம்]படி செய்யவேண்டும்.

இதுவரையில், இந்த உறுப்பின[ர்]கள், பொதுமக்களிடம் ஒருவிதமா[ன] தொடர்பும் வைத்துக் கொள்ளா[ம]லேயே இருந்துவிட்டனர். அரசிய[ல்] நிர்ணய சபைக்குத் தமிழகத்[தி]லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்[டு] சென்றுள்ளவர்கள், யார், என்[று] கேட்டால், பொதுமக்கள், அப்படி[யா]? சிலர் சென்றிருக்கிறார்களா, என்[று] கூடக் கேட்பர்—அந்த அளவுக்கு[ப்] பொதுமக்களின் தொடர்பு அற்[றுக்] கிடக்கின்றனர், இந்த உறுப்பின[ர்]கள். ஏனோ, நாமறியோம், ஆ[னா]ல் இது எவ்வளவு கேடு பயக்கக்கூடிய[து] என்பதை மட்டும் நன்றாக அ[றி]வோம்.

அரசியல் நிர்ணய சபையிலே, [...] கோடி மக்களின், எதிர்கால வாழ்[...]

...ற்றிய திட்டம் தீட்டப்படுகிறது; ...ந்தத் திட்டம், எவ்விதத்திலும், ...ங்களுக்குத் தீமை பயக்காத வித...ாக இருக்கும்படி பார்த்துக்கொள் ...தற்காக, பொறுப்பையும் அதிகா...த்தையும் கொடுத்துப் பொதுமக்...ள் இவர்களை அங்கு அனுப்பியிருக்...றார்கள்.

அவர்கள் அங்கு செல்லப்பணம், ...ங்கியிருக்கப்பணம், எல்லாம், 'மிக ...கத் தாராளமான அளவில், அவர் ...ளுக்குப் பொது மக்களின் வரிப்...ணத்திலிருந்து தரப்பட்டு வரு...றது.

இதுவரை, அரசியலமைப்புக்...ாக இரண்டு கோடி ரூபாய் செல ...ழிந்திருக்கிறதாம்!

நமது உறுப்பினர்கள் சென்றிருக்...றார்கள், நமது நலன்கள் பாதுகாக்...ப் படும், உரிமைகள் பாதுகாக்கப்...டும், என்று நம்பிக்கொண்டு, கந்தன் ...டையில் உட்கார்ந்திருக்கிறான், ...ப்பன் ஏர் உழுகிறான், கோவிந்...ன் மூட்டை சுமக்கிறான், கோபா...ன் எழுதிக்கொண்டிருக்கிறான்!

ஆனால் இந்த உறுப்பினர்கள், ...ங்கள் 'திருமுகம்' யாருக்கும் ...தரியக்கூடாது என்று தீர்மானித்து ...விட்டனர் போலும்—யார் கண்ணி...லும் படுவதில்லை — ஒருமுறையே ...லும், தங்களை அங்கு அனுப்பி ...வைத்த பொதுமக்களிடம், அங்கு, ...இன்னகாரியம் நடைபெறுகிறது, ...ங்கள் இன்ன அளவு பங்குகொண் ...டோம், இன்னதிட்டம் தீட்டப்படுகி...றது, அதிலே இவ்விதமான மாசு ...இருந்தது, அதனை நாங்கள் துடைத்...தோம் என்று எடுத்துக் கூறினதே ...இல்லை! ஏன்? அங்கு என்ன நடை...பெறுகிறது என்பது, அவர்களுக்கே ...புரியவில்லை! எல்லோருக்குமா!! கூற ...முடியாதே அவ்விதம், அங்கு நடை...பெறுவதைக் கூறுவது, கூடாது ...என்ற எண்ணமா? அச்சமா? இருத்த...லாகாதே! அங்கு நடைபெறுவதைக் ...கூறினால், பொதுமக்களுக்குப் புரி...யாது என்ற எண்ணமா? அதுவும், ...தவறுயிற்றே! பொதுமக்களை இழிவு ...படுத்துவதாகுமே! ஏன், அவர்கள், ...அங்குசென்று சென்று திரும்பு...வதும், பொதுமக்களிடம் 'சேதி' ...கூறுமலிருப்பதுமாக உள்ளனர்.

பொறுப்பும், கவலையும் உள்ளவர் ...கள் என்பதற்கா இது அறிகுறி?

இந்தப் போக்கிலே இவர்கள் இராமல், ஒவ்வொரு முறை போய்த் திரும்பும் போதும், பொதுமக்களி டம் விஷயம் கூறுவதும், போது முன்னர், பொதுமக்களின் கருத்தைத் திரட்டிக்கொண்டு போவது மான, பொறுப்புடன் நடந்துகொண் டிருப்பார்களே யானுல், அவர்களின் நிலையும், உயர்ந்திருக்கும், மக்களின் உரிமைக்கும்நக்கதோர்பாதுகாப்புக் கிடைத்திருக்கும். செய்தாரில்லை இதுபோல், இனியும் இப்போக்கு கூடாது, என்று, எச்சரிக்கிறோம்— வேண்டாம், கோபிப்பர் — எடுத்துரைக்கிறோம்.

"உறுப்பினர்களே! கொஞ்சம் ஊராரிடம் உறவாடுங்கள்! தேர்ந் தெடுக்கப்பட்டு விட்டோம், இனி என்ன வேலை, அவர்களிடம் என்று இருந்துவிட வேண்டாம் — அங்கு சென்று நீங்கள் செய்த காரியத்தைக் கொஞ்சம், எமக்குக் கூறுங்கள்! என்று பொதுமக்கள் கேட்கின்றனர், ஏக்கத்துடன்.

சென்னைப் பிரச்னை போன்ற தோர் சிக்கல் கிளம்பியுள்ள இந்தச் சமயத்திலாவது, இந்த உறுப்பினர் கள், மக்கள் முன் தோன்றி, விளக் கம் கூறி, கருத்தைத் திரட்டவேண் டாமா! வாருங்கள் உறுப்பினர்களே! வந்து மக்களிடம் பேசுங்கள்—மக்க ளின் கருத்தை அறிந்துகொண்டு போய், மேலிடத்தில் கூறுங்கள், என்று அழைக்கிறோம், அ. நி. சபை சென்றுள்ள தமிழக அன்பர்களை!

அவர்களுக்கு அலுவல் அதிகம், அதைவிட அதிகம் அசட்டை, என் றால், மக்கள்தான், செல்லவேண்டும், அவர்களைக் கண்டு, 'கணக்கு' கேட்க.

ஏன், எந்தெந்த ஊரிலிருந்து, இந்த உறுப்பினர்கள் சென்றிருக் கின்றனரோ, அங்குள்ள, 'பொது மக்கள்' அவர்களைக் கண்டு, கேட்கக் கூடாது — ஊர்வலமாகச் சென்று, பொதுக்கூட்டம் கூட்டி—ஏதேனும் ஓர் முறையில் – அமைதி குலையாத முறையில்.

—✲—

யானை புகுந்த வயல்

7-ம் பக்கத்தொடர்ச்சி

வரி விதிப்பு முறை எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதைப் பழந்தமிழர் நன்கு உணர்ந்து ஊராள்வோருக்கு உரைத்துமுள்ளர். வரி விதிப்பது கண்மூடித்தனமாக இருக்குமானுல், கோபாலர் கூறியது போலச், செலவுக்குப் பணம் வேண் டும், ஆகவே வரி விதிக்கிறோம் என்ற முறையில் இருக்குமானுல், வரி தரு கிற மக்களும் வாடிடுவர், வரிபெறும் சர்க்காரும், திறனற்றுப் போகும்.

முற்றியபிறகு அறுவடைசெய்து, கவளம் கவளமாகக்கொண்டால்,ஒரு மாவிற்கும் (20மா, கொண்டது ஒரு வேலி) குறைந்த நிலத்தில் விளையும் கதிரும், பலநாட்களுக்கு வரும்,அங் ஙனம்செய்யாது, பல மா அளவுள்ள நிலமாயினும், யானை, அதிலேதனியே புகுந்து, உண்ணத் தொடங்கினல், அதன்வாயிலே புகும் நெல்லைவிட, அதன்காலால் கெடும் நெல் அதிக மாகும் என்றகருத்தை, எடுத்துக் காட்டி, இதைக் கவனித்து வரி விதிப்புக்கொள்கையையும் வகுத் துககொள்ளவேண்டும், என்று அறி வுறுத்திக் கூறுகின்றார், பழந்தமிழ்ப் புலவர்.

காய்நெல் அறுத்து
கவளம் கொளினே
மாநிறை வில்லதும்
பன்னாட் காகும்
நூறு செறுவாயினும்
தமித்துப்புக்கினினே
வாய்புகுவதனினும்
கால் பெரிது கெடுக்கும்.

என்று எடுத்துக்காட்டினர், பிசிராந் தையார், எனும் பெரும்புலவர்.

ஒருயானையின் பசிக்குக்கூடவா, போதுமானதாக இராது இந்நிலத் தின் விளைவு-என்றெண்ணி, முற்றுக் கதிருடன்உள்ள வயலிலே, யானையை மேயவிட்டால், அதன் காலால் பயிர் அழிந்து, வயலும்கெட்டு, யானையின் பசியும் போகாதிருக்கும்! வீண் நஷ்டம்தானே அது விளக்கமறியாத வேந்தன் விதிக்கும் வரி முறை, கதிர் முற்ருத வயலில், யானை புகு வதுபோலிருக்கும். இதனைப் புலவர் மேலும் விளக்குறர்.

அறிவுள்ள மன்னன் எந்தமுறை யிலே, வரி கொள்ளவேண்டும் என் பது அறிந்து வரி பெறுவானுயின் பொருளும் மிகுதியாகப் பெறமுடி யும். நாட்டையும் தழைக்கச் செய்ய முடியும், என்று, கூறுகிறார்.

நாடு செழிக்கவேண்டும், அதுவே நல்லாட்சியின் குறிக்கோளாகஇருத்தல்வேண்டும். இந்தக் கடமையைக் குறைவறச் செய்வதற்கே, குடிமக்கள், கொற்றவனைக் கொண்டனர். அவன், குடிமக்களிடம் வரிபெற்றுத்தான், இக்காரியம் செய்தாகவேண்டும், நாட்டு வளமும் பெருகவேண்டும்—இரண்டும் ஒருசேர அமையும் படியானமுறையில் இருத்தல்வேண்டும், வரி முறை!

மல்லிகை சூடவேண்டும், ஆனால்' செடியோடு பெயர்த்தெடுத்தா சூடுவர்—சூடிடின் மல்லியால் கிடைக்கும்மணத்தைமட்டுமா, செடி இழந்ததால் பெறும் நஷ்டத்தையுமன்றோ தாங்கவேண்டும். அறிவுடைய செயலாகுமா?

ஆகவேதான், பிசிராந்தையார்,

அறிவுடை வேந்தன்
நெறி அறிந்து கோளினே
கோடியாத்து
நாடு பெரிது நந்தும்

என்று கூறினர்.

வரி என்றால், அதிலே கொள்கை என்ன இருக்கிறது! என்ற கோணல் புத்தி கூடாது, நெறிஅறிந்துகோள்ள வேண்டும் என்று கூறுகிறார், புலவர்.

அதுபோலன்றி, மன்னன், அறிவு கெட்டவனாகி, கூவிடும் கூட்டத்துடன் குலவி, மக்களின் அன்பு கெடும்படியான முறையிலே வரியை வசூலித்தால், யானை புகுந்த வயல் போல, தானும் வாழமாட்டான், ஊரும் பாழ்படும், என்று எச்சரித்துமிருக்கிறார்.

மெல்லியன் கிழவனாகி
வைகலும்
வரிசையறியா
கல்லெனா
சுற்றமோடு
பரிவுதபவெடுக்கும்
பிண்டம் நச்சின்
யானைபுக்கபுலம்போல
தானுமுண்ணாது
உலகும் கெடுமே

எனும் நல்லுரையை, பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பி எனும் மன்னனுக்குக் கூறினர்.

அறிவுடை நம்பிக்குக் கூறப்பட்ட இந்த அறிவுரை, ஆட்சியாளராகும் அனைவருக்கும் தேவைப்படுவது தான். கோபாலர், யானைபுக்கபுலம் போலாக்கிவிட அல்ல, நாட்டுக்கு அமைச்சரானது.

வரிமேல் வரி குவிகிறது, எனினும் சர்க்கார், பொதுநலனுக்குச் செலவிடுவதற்குப் போதுமான பணமும் இல்லை என்றபேச்சும் குறைவதில்லை. ஏன்? வரிவிதிப்பு முறையிலே, நெறி இல்லை, திட்டமில்லை, தெளிவுஇல்லை, கொள்கை இல்லை! வயலிலே யானை புகுந்துவிடுகிறது!! தானும் உண்ணாது, ஊருக்கும் கேடு விளைவிக்கிறது!! அதுபோன்றே அமைச்சரின் வரிவிதிப்புமுறையும் சர்க்காருக்கும் திருப்திதராத நிலையையும், மக்களுக்கு மனவேதனை தரும் வகையிலும் இருக்கிறது. எனவேதான், வரி விதிப்புக்கு உள்ள கொள்கையை விளக்கும்படி, மாணவர் கேட்டார்! அமைச்சரோ, அலட்சியமாகப் பேசி விட்டுப் போய்விட்டார்!!

●

மலேயாவாழ் தமிழர்!

——

பொன் விளையும் பூமி, இருந்தும் புசிக்க வழியில்லாது, வறண்ட உள்ளத்தவராய், வாழ்வைக் கழித்தால் போதும் என்ற ஏக்கத்துடன், திரைகடலோடித் திண்டாடித் திரியும், இந்தியர்களில் பொதுவாகத் தென்னாட்டினர், அதிலும் குறிப்பாகத் தமிழர்கள் தொகைதான், அதிகம்!

ஆங்காங்கு அல்லும் பகலும், அல்லல்கள், அலையென எழும்பிய வண்ணம் இருக்கிறது. அவர்களோ அலையின் மத்தியில் அகப்பட்ட துரும்பென, கண்ணீரும் கம்பலையுமாய், கன்னித் தமிழ் நாட்டை நினைத்து, கதறித் துடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அந்நிய நாட்டில் அவதிப்படுபவர்களில் மலேயா வாழ் இந்தியர் நிலை இருக்கிறதே, அது சொல்ல முடியாத அளவில் இருக்கிறது. ஆட்சியின் அடக்குமுறை 'ஆட்கொல்லி' சட்ட உருவிலும், ஐரோப்பிய முதலாளிகள் தூண்டுதல் 'துப்பாக்கி'க் குண்டுகளாகவும், அவர்கள் உயிரை ஊசலாடும்படி வைத்திருக்கிறது. அங்கு அவதிப்படும் மக்களில் பெரும்பாலோர், நஞ்செய் நாடு இருக்க, பஞ்சைகளாய் ஓடிப் பரதவிக்கும், தமிழர்தான்! நெற் களஞ்சியம் இருந்தும், கால் வயிறு கழுவ வகையில்லாது, பெற்ற தாய், கட்டிய மனைவி, கதறும் குழந்தைகளை விட்டுச் சென்று, திரும்ப முடியுமோ முடியாதோ என்று திண்டாடும் தமிழர்தான்!

* * *

மலேயாவின் மொத்த மக்கள் தொகை 55 லட்சமாகும். இதில் சுமார் 24 லட்சம் பேர் சீனர்கள். அடுத்தபடி இருப்பவர்கள் மலேயர்கள்—மலேயாவின் பூர்வ குடிகள். இவர்கள் எண்ணிக்கை சுமார் 23 லட்சம். மூன்றாவது வரிசையில் நிற்பவர் இந்திய நாட்டினர்தான்! இவர்கள் தொகை $7\frac{1}{2}$ லட்சமாகும்.

மலேயாவில் வாழும் இந்திய மக்கள் ஏழரைலட்சம் பேரில் தமிழர்கள் மட்டும் $6\frac{1}{4}$ லட்சம்! அதாவது ஆறில் ஐந்துபங்குபேர், தமிழர்கள். மீதி $1\frac{3}{4}$ லட்சத்தில் தெலுங்கர், மலையாளிகள், சீக்கியர், பஞ்சாபி — இருக்கின்றனர். இதிலுங்கூடத்தெலுங்கர், மலையாளிகள் தொகைதான் அதிகம். சீக்கியர், பஞ்சாபியர் அதற்கு அடுத்தபடிதான். வளம் நிறைந்த நாட்டைவிட்டு, வழி இல்லாத காரணத்தால், மலேயாசென்று தவித்து நிற்கும் $6\frac{1}{4}$ லட்சம் தமிழர்களில் பெரும்பாலோர் கூலிகள்தான். மலேயாவின் முக்கிய தொழில் ரப்பர் தோட்டமும், தகரம் வெட்டுதலுமே ஆகும். இரண்டுதொழில்களின் பிடிகளும் ஐரோப்பிய முதலாளிகள் வசம் இருக்கின்றன. இவர்களின் ரப்பர் தோட்டங்களில் இடுப்பொடிய வேலை செய்பவர் தமிழர்தான்! கொஞ்சம் படித்தவர்கள் அரசாங்க உத்யோகத்தில் — குமஸ்தாதான்! — சிலர் மட்டுமே வக்கீல் தொழிலிலும், வியாபாரத்திலும் இருக்கின்றனர். மலேயாவில் உழைத்து, உருக்குலையும் கூட்டம் தமிழர்கள் தான். தோட்டத் தொழிலாளர்களாகஇருந்து தொல்லைகள் அனுபவிக்கும், பட்டினிப் பட்டாளமான தமிழர்களில் பெரும்பாலோர் கல்விவாசனை அறியாதவர்கள். இந்த உழைப்பாளிக் கூட்டத்தின் நிலை மிகவும், பரிதாபமானதாகும்! 'கூலிகளாக'ச்சென்று, கூனல் முதுகினராகி, தாயும்தந்தையும் மகிழ்ந்து, குலாவி வளர்த்த தாய்நாட்டிற்கே திரும்ப வழியின்றி வதையும்கூட்டம் இவர்கள்தான்!

★ கலைமாநாடு ★

கலை தழைக்க வேண்டுமாம்! ஆமாம்! அதற்காக, அரசாங்கமே, க்க முயற்சி எடுத்துக் கொள்ள ன் வந்திருக்கிறதாம்.

முதல் முயற்சி—ஓர் மாநாடு! மற்கொண்டு, ஏதேனும்இருக்குமா? —என்று கேட்பது,—வீணான றை கூறித் திரியும் குற்றமாகக் ருதப்படக் கூடும், ஆகையால், கட்காதீர்கள்— ஏதோ, இதையா து செய்தார்களே, மகிழ்ச்சி அடை ங்கள்—மகிழ்ச்சி வரவில்லை என்கி ர்களா? மகிழ்வது போல நடியுங் ள்—நடிப்புக் கலை!! —பாருங்கள்— ர்க்கார் ஒரு முயற்சி எடுத்த டனே, கலை, வளருகிறது!!

* * *

ஒரு இலாபம்—உடனடியாக ன்ன செய்கிறார், ஏது செய்கிறார், ல்வி சர்க்காரிலே உள்ள கல்வி ந்திரி, அபுல் கலாம் அசாத் ன்று பலருக்கு எண்ணம் ருந்து வந்தது—அவர்ஏதோ, தம் லானந்த இந்தத் தள்ளாத வயதி ம், செய்து கொண்டுதான் இருக் றார் என்பது, தெரிகிறது, கலை நாட்டின் மூலம். பெரியவர்களின் ஷயமாகத் தெரிந்துகொள்ள ய்ப்புக் கிடைத்ததல்லவா—இலா ம்தான்.

* * *

கலை, பாமரமக்களிடம் தொடர்பு ாண்டதாக, பாமரமக்களுக்குப் த்தமானதாக இருக்க வேண்டும் ஆக்கப்படவேண்டும்— மாற்றப் வேண்டும்—என்று கலை மாநாட் ல ஒரு தீர்மானம் நிறைவேற்றப் டிருக்கிறது. மக்கள் சர்க்கார் ருங்கள் — மக்களுக்கு, மக்காச் ளம் தருவதோடா, திருப்திப் டுவிடும், கலையையும் வழங்க முன் திருக்கிறது—ஜெய் கலாமாதா!

கலா மாநாடு, ஏன் பாமரமக்களிடம் பரிவு காட்டிற்று, என்று கேட்கிறீர்களா? ஏன், காட்டக்கூடாது! ஒவ்வொரு மந்திரியும், காட்ட முயற்சிக்கும்போது, கல்வி மந்திரி பின் தங்கலாமா? முன்னேறுகிறார், கலா முரசு கொட்டிக்கொண்டு.

* * *

பாமரன்— படித்தவன்—பகுத்தறிவாளன்—ரசிகன் —கலாவாணன்—என்று பல வகையினராக, மக்களைப் பிரித்துக் காட்டுகிறார்கள். அவ்விதம் செய்து விட்டு, கலாவாணர்களின் திறமையை, ரசிக்கும் திறன், சிலருக்கே உண்டு, கலை இப்படி இப்படி இருக்க வேண்டும் என்பது பகுத்தறிவாளரின் கவலை, இவர்களெல்லாம், எழுதுவதைப் படிப்பது படிப்போர் இலட்சணம், 'என்னமோ, பேசுகிறார்கள், எழுதுகிறார்கள், நமக்கென்ன புரிகிறது!" என்று எண்ணிக்கொண்டு ஏரைத்தாங்கி, ஊரைச் சீராக்கும் உழைப்பாளி, பாமரன், என்று, இவ்விதம் ஒரு பாகுபாடு புகுத்தப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டும் போய்விட்டது.

* * *

ஆஹா! அந்த வானவில்லின் அழகு இருக்கிறதே! அது என் ஐயன், ராமச்சந்திரனின் கோதண்டம் போலிருக்கிறது—என்று ரசித்திட T. K. C.க்குத் திறமும் நேரமும் இருப்பது போல, உழவன் குமரனுக்கு, இருக்கமுடியுமா! வானவில்லைப் பார்த்ததும், ஐயனின் கோதண்டமா, ஆண்டையின் கோபம்தான் கவனத்துக்கு வரும், 'வில்' தெரிகிறது, இப்போதாவது மழை பெய்தால், உழவுக்கு வழி ஏற்படும், ஆண்டையின் கோபமும் குறையும், என்ற எண்ணம்தான் பிறக்கும், நிலைமைக்கு ஏற்றபடி நினைப்பு!

கலையைப் பாமரனிடம் கொண்டு வரப்போகிறார்களாம் — அதாவது பாமரனுக்குப் புரியக்கூடிய விதமாகவும், பிரியமாக இருக்கக்கூடிய வகையாகவுமாக்கி, கலையை, அவனிடம் கொண்டுவரப் போகிறார்கள். கலை ஒன்றும், கோபுர உச்சியில் இருக்கும் சிலையாக இருக்க வேண்டுமென்று கூறுபவனல்ல நான், என்ற போதிலும், கலையைப் பாமரனுக்கு ஏற்றபடி, புதுப்பிக்கப் போவதாகக் கூறுகிறார்களே, அவர்களைக் கேட்கிறேன், ஏன்? எப்படி? என்ன பலனை எதிர்பார்த்து? என்று. பாமரனுக்குக் கலையைக் கொண்டுவந்து தருவது இப்போது, அவசரமான காரியமா? அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான், என்று எண்ணுகிறதா சர்க்கார்? அல்லது, சர்க்காருக்கு, பாமரனுக்காகச் செய்ய வேண்டிய வேறு பல காரியங்களைச் செய்வதற்குச் சிரமம் அதிகம் இருக்கிற காரணத்தால், எதையாவது செய்தோம் என்ற பெயரிருக்க வேண்டாமா என்பதற்காக, இதைச் செய்கிறார்களா? என்பது விளங்க வேண்டும்.

கலை, நுண்ணறிவு, என்கிறார்கள் —அதை நுகர, அடிப்படைக் கல்வியும், கருத்துத் தெளிவும், முதலில் இருந்தாகவேண்டும் என்கிறார்கள், அதனாலாய பயனை அடைய, அதன் நுட்பங்களை அறியும் திறன் இருத்தல் வேண்டும் என்கிறார்கள்—இவைஎல்லாவற்றையும்விட, கலையை நுகர, நேரமும், அதற்கு ஏற்ற நிம்மதியும், இருக்கவேண்டும் என்பதன் அவசியத்தைப் பலரும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்— கலைவாணர்கள் உட்பட. வாழ்க்கைக் கலை, முதலில், பிறகு வண்ணக்கலை, என்று கூறினார் ஒருவர். பாமரரிடம் கலையைக் கொண்டுபோய் நிறுத்த விரும்பும், கனம் கல்வி மந்திரி, பாமரரிடம், இந்தச் சூழ்நிலை ஏற்பட, என்ன செய்தார்? என்னசெய்யத்திட்டமிட்டிருக்கிறார்? சூழ்நிலையை, கலையை நுகருவதற்கு ஏற்றபடியானதாக மாற்றி அமைக்கா முன்னம், கலையைக் கொண்டுவந்து நிறுத்துவது, பயன்படுமா—என்பது பற்றி, யோசிக்கவேண்டும், பெரியவர்கள். கலை மாநாட்டிலே, இப்படிப்பட்ட கவலைதரும் பேச்சுக்கு இடம் இருத்தல்கூடாது! என்றுகூறிக் கோபிப்பீரேல், "வேண்டாம் கனம்களே! கலா

மாநாட்டுக்குப் பிறகாவது, யோசித்துப்பாருங்கள்" என்று கூறுகிறோம்.

வாழ்க்கைப் புயலால், அவன் மிகவும் வாடுகிறான்.

வறுமைத் தேள் கொட்டி, அவன் துடி துடிக்கிறான்.

அவநம்பிக்கையும் அதிருப்தியும் அவனைப் பிடித்தாட்டுகிறது.

அவன் வாழ்வு கேட்கிறான்—முழு வாழ்வு!

அதை அவன்பெற, வழி செய்யுங்கள் முதலில், விரைவில்! பிறகு கலையைத் தாருங்கள்—அதற்கு முன்பு செய்யப்படும் முயற்சி, ஏட்டிலே எழிலைத் தரும்—நாட்டிலே பயனை உண்டாக்காது.

இன்னொன்று, பாமரனுக்கு ஏற்றபடி என்ற வாசகம் இருக்கிறதே, அதன் முழுப் பொருளும், சற்றுத் தெளிவாக வேண்டும்.

மாம்பழம், இவ்விதம்தான் இருக்கும், வேம்பு இப்படித்தான் இருக்கும், சுவையில், உருவில், இரண்டுக்கும் இன்னின்ன வித்யாசம் இருக்கும், என்று அறுதியிட்டுக் கூறுவது போலவே, ஒன்றை மற்றொன்றாக மாற்றிவிட முடியாது என்பதையும் அறிவித்திருக்கிறார்கள். ஒருவேளை, மாம்பழத்தை வேண்டுமானால், கெடவிட்டு, வேம்பை விடக் கசப்புள்ள தாக்கிட முடியும், வேம்பைத் தேனில் போட்டு எடுத்தும்கூட, தீங்கனியாக்க முடியாது; இது புரிகிறது சுலபத்தில்.

பாமரர் – மற்றவர் – என்ற பாகுபாடு, இதுபோலத்தானா! பாமரர், என்பவர்கள், எப்போதும் அதே நிலையில், போக்கில்தான் இருப்பார்கள், இருக்கவேண்டும் – மாற்றமுடியாது - மாற்றக்கூடாது – என்று எண்ணுகிறார்களா, அல்லது பாமரராக இருப்பவர்களை, நமது முயற்சியால், திட்டத்தால், 'மற்றவர்கள்' போல, உயர்த்த முடியும், உயர்த்த வேண்டும், என்று கருதுகிறார்களா, என்பது தெளிவாக்கப்பட வேண்டும். கலையை அவர்களிடம் கொண்டு போகும் முயற்சி இருக்கிறதே, அது இருக்கட்டும், பாமரரின் நிலையை உயர்த்தப் போகிறீர்களா, இல்லையா, என்பதைத் தெரிவியுங்கள்.

குளத்துப் படிக்கட்டிலே பாசி அதிகம் — ஒரு கோயிற் குளத்தில் தான்! மன மாசு போக்கிக் கொள்ள அங்கு செல்லும் பக்தர்கள், படிக்கட்டிலே கால் வழுக்கி விடாதபடி, ஜாக்ரதை கூற, ஒரு காவலாளியை அமர்த்துவது உண்டு—இம்முறை பயனில்லை என்பதை அறிந்து, படிக்கட்டுகளின் பாசி போக்க, குளத்தையே சரிப்படுத்துவதும் உண்டு.

எது சரி? எது முறை? என்பது போலத்தான், பாமரனிடம் கலையைக் கொண்டு போகும் முயற்சியிலும், ஒன்று தெரியவேண்டும், பாமரனைப் பாமரத் தன்மையிலிருந்து விடுவிக்கும் முயற்சி சரியானதா, அல்லது பாமரத் தன்மையில் உள்ளவர்களுக்கு ஏற்றவிதமாகக் கலையைத் திருத்தி அமைப்பது சரியான முறையா, என்பதை யோசிக்க வேண்டும்.

பாமரர், அதே நிலையில்தான் இருப்பர், என்றால், கலையை, அவர்களிடம் கொண்டு செல்கிறோம், என்ற பேச்சு, வெளிநாட்டு மார்க்கட்டு–தயாரிக்கப்படும் பிரச்சாரச் சரக்கு. என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் நிலையை உயர்த்தத்தான் போகிறோம், என்றால், கலையை அவர்களிடம் கொண்டுபோகத்தேவையில்லை, கலை இருக்குமிடத்துக்கு அவர்களை அழைத்துக் கொண்டுபோகலாம்!

* * *

இந்தப் பிரச்னையிலே, 'சூது வாது' இருத்தலாகாது — இருக்குமானால், கலையும் வளராது, பாமரர் நிலையும் உயராது.

கலையை, பாமரரும் உணரும்படியான, முறையிலே மாற்றுவது, என்றல்ல, திட்டம் தீட்டவேண்டியது.

பாமரரைப் பாமரத்தன்மையிலிருந்து விடுவிக்க எடுத்துக்கொள்ளும், பலமுயற்சிகளில், கலையையும் பயன் படுத்த முடியுமா, என்று யோசித்துத் திட்டம் தீட்ட வேண்டும்.

கல்வி, சுகாதாரம், தொழில், வறுமை போக்குவது, ஆகிய பல முறைகளுடன் கலையையும் கூட்டி, பாமரரை, பாமரத்தன்மையிலிருந்து விடுவித்து, கலை ஆர்வமும், கலையை நுகரும் திறமையும் அவர்களுக்கு ஏற்படும்படி செய்யவேண்டும். இந்த நோக்கத்துக்கு ஏற்றபடி, கலையின் தன்மையும், மாறவேண்டும். பாமரருக்கு, கலை, விளங்கவேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டால், பயன் ஏற்படாது—நிலையை உயர்த்தும் பயன்!

கலாமாநாடு நடத்தியவர்களின் நோக்கம், என்ன என்பது, விளங்கவில்லை—இந்த முறையிலே பிரச்னையை ஆராயும்போது.

ஓவியன் தீட்டிய அந்தக் கனி குலுங்கும் மரத்தைக்கண்டு, உயிர்ப் பறவைகள் வந்து கூடி, திரையைக் கொத்துவது, ஓவியனுக்குச் சிறப்பு காண்போருக்குக்களிப்பு, பறவைக்கு அல்ல!

அதுபோலவே, பாமரர், பாமரராக இருப்பதால் அடைந்து வரும் தொல்லை நீக்கத்துக்கான, வழி வகுக்கும் கலையைக்காணவே, விரும்புகிறோம்—பாமரனின் கருத்துக்கு கலை உருவில் பயனற்றபல, தருவதை அல்ல.

கலைக்கும் பாமரனுக்கும் உள்ள தொடர்புபற்றிய கவலையும், அந்தத் தொடர்பை எப்படிச் சரியாக்குவது என்ற திட்டமும், பாமரனுக்கும் வாழ்க்கையின் அடிப்படைப்பிரச்னைகளுக்கும் இன்றுள்ள தொடர்பு என்ன, அதனை எப்படித் திருத்துவது, என்ற பெரும் பொதுப் பிரச்னையிலே, ஒரு பகுதியாகக் கருத வேண்டும். கலைமாநாட்டார், இந்தக் கருத்துடன் உள்ளனரா? தெளிவு வேண்டும்—திட்டம் வேண்டும்.

★

காஞ்சிபுரம் தொகுதியில்

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில், காஞ்சிபுரம் தொகுதியில் (காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள்) காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து நின்ற, தோழர் கலியாணசுந்தரம் அவர்களும், தோழியர் ராஜம்மாள் அவர்களும் வெற்றி பெற்றனர்.

புதுக் கடவுளுக்குப் பழங்கடவுள் பல்லாண்டு

மாஜி கடவுள்கள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

மெய்யன்பர்கள்' திரண்டுவந்து பணிந்தனர்-பலகாலம்-பகுத்தறிவுச் சுடரொளி கிளம்புமட்டும்!

ஜுவெஸைத் தொழுவதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைவிட, கிரேக்கர்களுக்கு, பாசிடனை தொழுவதற்கான, சந்தர்ப்பமே அதிகம்—கடற்பயணம் அதிகம் என்ற காரணத்தால்.

கடற் பயணத்தின்போதெல்லாம், பாசிடனைப்பற்றிய நினைப்பு — அலை அதிகமாக எழும்பும்போதெல்லாம், அவன் நாமத்தைப் பஜிப்பது, கலம் ஆபத்தில் சிக்கும் போதெல்லாம், அவனுக்குப் பலி கொடுப்பது. பயணம் முடித்துக்கொண்டு, வீடுவந்ததும், ஆபத்தின்றி கொண்டுவந்து சேர்த்ததற்காக, ஊரில் கோயிலில், பாசிடனுக்கு, விசேஷமான பூஜை! பாசிடன்பாடு,கொண்டாட்டந்தான்!

பாருங்களேன், உருவை! கட்டுமஸ்தான திரேகம்! அழிக்கும் திறத்தை விளக்க, காலின்கீழேயே, நசுங்கிக்கொண்டிருக்கும் எதிரி! கையிலே, திரிசூலம்! ஏறத்தாழ முயலகனைக் காலின்கீழ் போட்டுமிதித்தபடி, மழுஏந்தி நிற்கும், "மகேசன்" போல் இல்லையா!

இப்போது சென்று கேட்டுப் பார்க்கச் சொல்லுங்கள், 'தேவார திருவாசகங்களை'—கிரேக்க நாட்டில், "ஐயா! அலைகடல் அதிபன்! அதிபல தேவன்! ஐயன், பாசிடனின் ஆலயம் எங்கே?" என்று! பதில், என்ன கிடைக்கும்! ஒரு கேலிப் புன்னகை! பிறகு ஓர் விளக்கம்!! பாசிடன், மனித சமுதாயம், பகுத்தறிவுப் பள்ளியில் நுழையுமுன், இருந்தான் —இன்று இல்லை — பாசிடன் ஓர் மாஜி கடவுள்!—என்று கூறுவர்.

திருவாதிரைத் திருநாள் கொண்டாடும் நமது தோழர்கள், திகைப்படைவர்; "என் இந்த நாத்திகர்கள், பாசிடன் எனும் பகவானை இப்படிக் கைவிட்டு விட்டனர்! இந்த நாத்திகர்களை ஏன் நாதன் இன்னமும் விட்டுவைத்திருக்கிறார்" என்று எண்ணுவர். ஆனால் அவர்களோ, "யாரப்பா, இந்தப் பழைய பசலி! பள்ளிப் பிள்ளைகட்கு உள்ள தெளிவும் காணோமே இவர்கட்கு! பாசிடனைத் தேடுகிறார்களே, இந்த 20-ம் நூற்றாண்டில்!" என்று கேலி செய்வர்!

உலகத்தின் கேலியை நமது 'மதவாதிகள்' மதிக்கவா போகிறார்கள்! அவர்கள் இன்றும், 'ஆடிய பாதத்தைத் தேடிப் பார்த்தபடிதான் உள்ளனர்—ஆடலழகிகளின் துணையையும் நாடி. பாசிடன், இன்று, கிரேக்க நாட்டிலும் சரி, அறிவு வளர்ந்த மற்ற நாடுகளிலும் சரி, ஒரு மாஜி கடவுள்! ஆனால், கிரேக்கரும், 'ரோம் நாட்டவரும், இன்று நம் நாட்டவர் இருப்பது போன்ற நிலையில் இருந்தபோது, பாசிடனுக்கு இருந்துவந்த 'யோகம்' அற்ப சொற்பமானதல்ல! காரினித் என்ற நகரிலே, கண் கவரும் வனப்புள்ள கோயில், பாசிடனுக்கு! கடற்பயணம் செய்துவிட்டு வருவோர், கொட்டும் காணிக்கை, மலை மலையாகக் குவியும் —பூஜாரியின் நிலை, அதுபோலவே ஓங்கி வளரும். இன்று காரினித் நகரம் உண்டு, கோயில் கிடையாது; பாசிடனைப் பயபக்தியோடு தொழுத கிரேக்கர்களின் சந்ததியார் வாழ்கின்றனர், ஆனால் பாசிடனைத் தொழுது கொண்டில்லை! முன்னோர்களின் மனதிலே மூண்டிருந்த அஞ்ஞான மூடுபனியில், விளைந்த பல கற்பனைத் தோற்றங்களிலே,பாசிடன் ஒன்று, என்று கண்டறிந்தனர்.

ஓங்காரப் பொருள்—ஒன்று, ஆகிவிட்டது!

கடவுளாக இருந்த பாசிடனுக்கு கற்பனை, எனும் நிலை பிறந்துவிட்டது, அங்கே!

தகப்பனை வீழ்த்திவிட்டு தன்னைத்தானே கடவுளாக்கிக் கொண்ட ஜுவெஸ், தன் உடன்பிறந்தார்களின் பகை கூடாது என்று எண்ணி, ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் 'ஆதிபத்யம்' அளித்தான்; அனைவரும், ஜுவெஸைத் தலைமைக் கடவுளாக ஏற்றுக்கொள்வது என்ற நிபந்தனையுடன். இம்முறைப்படியே, பாசிடனுக்கு, கடலுலகாளும் 'பதவி' கிடைத்தது.

கடலிலே, பெரியதோர் அரண்மனையில் அமர்ந்து பாசிடன் அரசோச்சி வந்தான். நீண்ட தாடி! எதிரியை வீழ்த்தும் கூர்மையான திரிசூலம்! பாசிடனுக்கு ரதம் உண்டு, வெளியே சென்று வர. அதிலே பூட்டப்பட்ட குதிரைகளுக்குப், பொன்மயமான பிடரிமயிர்! குளம்புகள், நவரத்னங்கள் போல் ஜொலிக்குமாம்.

பாசிடனுக்குக் கடலுலக ஆதிபத்யத்தை ஜுவெஸ், அளித்தபோது, அங்கு அரசோச்சிக் கொண்டிருந்த தேவன் பெயர், டைடான் ஒஷியானஸ் என்பதாகும் — பெருங்கடல் என்பது பெயரின் பொருள். புதிய அதிபதியின் தோற்றத்தைக் கண்டதும் இவரிடம் போரிட்டுப்பயனில்லை என்பதைக் கண்டு கொண்ட பழைய தேவன், பதவியை இழப்பதே, மேலெனக் கருதினான். பாசிடனின் கண்ணொளிகண்டதும் பழைய கடவுளுக்குக் கருத்துக் குழம்பிவிட்டதாம். 'ராஜ்யத்தைப் பாசிடன் வசம் ஒப்புவித்து விட்டதோடு, பாசிடனின் பராக்கிரமத்தைப் பற்றிப் பல்லாண்டு பாடி வந்தாராம் அந்தப் பழைய கடவுள்.

அட பழைய பரமசிவமே! என்று பரிகாசப் பேச்சுப் பேசுவதுண்டல்லவா! கிரேக்கக் கடவுட்காதையிலே, பழைய கடவுள், புதிய கடவுள், என்பது, பரிகாசப் பேச்சல்ல—பகவானின் திருவிளையாடல்.

ஒரு அரசன், தன்னைவிட வலிவுள்ள வேறோர் அரசன் படை எடுத்துவந்தால், தோற்று ஓடுவது போலவே, கடவுள்களுக்கும் நேரிடுவதுண்டு! போரிட்டுத் தோற்றுத் துயருறுவதற்குப் பதில், பெண் கொடுத்து, சமரசமாவது போலவும், கடவுள்கள் செய்து கொள்வதுண்டு. கடவுளின் குணம் இப்படியா? என்று, 'அறிவும் ஆத்திகமும்' சமஎடையாகக் கலந்து, உட்கொண்டவர்கள், கேட்பர்—இக்காலத்தில். ஆனால் அந்த நாட்களிலே, ஆண்டவனைப் பற்றிய இத்தகு கதைகளை நம்புவதுதான், அறிவு, ஆத்திகம், இரண்டும்! மறுப்பவன் மாபாவி மட்டுமல்ல, மதிகினனாகவும் கருதப்படுவான்—இப்போதல்ல — பழைய நாட்களில் — பகுத்தறிவுக் கதிர் தோன்றா முன்னம்.

புதிய மோட்டாரில் பழைய வேடன்

மூத்த மகன் பட்டத்தரசனாவதும், இரண்டாம் மகனுக்கும் மூன்றாம் மகனுக்கும், செல்வாக்கான வேறு பதவிகளோ, சிறு ராஜ்யங்களோ தரப்படுவதும், இதுபோதாது என்ற மனக்குறையும், அண்ணனுக்கு அரசனாகும் 'பாக்கியம்' கிடைத்ததே என்ற பொறாமையும், மூண்டெழும் 'தம்பிமார்', அண்ணனிடம், போரிடுவது, அரச குலத்துக் கதை! கடவுள்களின் கதையும் இதேதான்!!

அரச குடும்பத்திலே கூட இப்போது, பொறாமை காரணமாக, அமளி நடைபெற்றால், அறிஞர்கள் எள்ளிநகையாடுவர். பொறாமை, சூது, சதி, போர், கலகம் இப்படிப்பட்ட உணர்ச்சிகளுக்கு அடிமையாகிக் கடவுள்களே பலப்பல செய்ததாகக் கதைகள் உண்டு—ஆனால் அவைகளைக் கேலியாகப் பேசவோ, கண்டிக்கவோ, சந்தேகிக்கவோ கூடாது—ஆத்திகர் அறிந்தால் ஆத்திரப்படுவர்! கடவுள்களின் கதைகள் எப்படிப்பட்டவைகளாக இருப்பினும் சரி, கொலை, களவு, காமக்கூத்து, அடுத்துக் கெடுத்தல், எனும் எத்தகைய தீய செயல் புரிந்ததாகக்கதை இருப்பினும், அவைகளைக் கடவுளின் திருவிளையாடல் என்று பயபக்தியோடு எண்ணிக்கொள்ள வேண்டுமேயல்லாது, இப்படியுமா செய்வது என்று கேட்கத் துணிந்தால், தலை உருளும் கீழே. அவ்விதமான ஆதிக்கம் செலுத்திவந்தனர், பூஜாரிகள்.

தேவனின் திருக்கலியாணகுணம், மானிடருக்கு மதிபுகட்டக் கூடியதாய், மனித குலத்தின் மாண்பினை வளர்க்க வல்லதாய், மனிதன் மனதிலே, தூய்மையான கருத்துக்களை, ஊட்டவல்லதாய், அவா, வெகுளி, காமம், சுயநலம், சூது, முதலிய அருவருக்கத்தக்க, தீய நினைப்புகளைச் சுட்டெரிக்கக் கூடியதாகவல்லவா இருக்கவேண்டும். கடவுள்களுக்கிடையே போட்டியும் பொறாமையும், போரும் சதியும், கலகமும் கபடமும், இருந்ததாகச் சித்தரித்துக் காட்டும் கதைகள் உள்ளனவே—மனித குலம், இத்தகைய கதாநாயகர்களையா, கடவுள்களாகக் கருதித் தொழவேண்டும்—சரியா, முறையா, அறிவாகுமா இது — ஆத்திகந்தான் ஆகுமா! — என்றெல்லாம், கேட்பவர்களின் தொகை இன்று பெருகிவிட்டது—பெருகியபடியும் இருக்கிறது, ஆனால், ஆதிகாலத்தில், கிரேக்க நாட்டிலே அதுபோல் பேசக்கூடாது—பேசுபவன் பெரும் பாவி!

அப்படி ஒருகாலம் இருந்ததா! அப்படி ஒரு நாடு இருந்ததா!! என்று சற்று ஆச்சரியத்துடன் கேட்பர், நம்நாட்டு அறிவாளிகளில் சிலர், நம் நாட்களில்! அவ்விதமான நிலைமை, கடலில் கட்டுமரமும் பாய்க்கப்பலும், தரையில் ரதமும் இருந்த காலத்தில், கிரேக்க நாட்டிலே இருந்தது ஆச்சரியமல்ல—இன்னும் நம் நாட்டிலே, வானத்தில் விமானமும், மண்ணில் மோட்டாரும் கடலில், அணுசக்தியால் செலுத்தப்படும் கப்பலும் சாத்தியம் என்ற நிலை ஏற்பட்டிருக்கும் நமது நாட்களிலேயும், கடவுள்களுக்குள் ஏற்பட்ட போட்டி, போர், ஆகியவற்றினைச் சித்தரிக்கும் கதைகள், புண்ய கதைகளாக, பூஜா மாடங்களுக்கு ஏற்றவைகளாக, பாராயணத்துக் குரியவைகளாக, பக்தி ஊட்டவும் முக்தி தரவும் சக்தி வாய்ந்த 'சத்'விஷயங்களாகத்தானே கருதப்பட்டுள்ளன-இது அல்லவா, ஆச்சரியம்! இன்றும், இவ்விதமான கதைகளைக் கண்டிப்பவர்கள் மீது காயவும் பாயவும், சர்க்கார் உட்படச் சனாதனப்படை தயாராக இருக்கிறதே, இதுவல்லவா ஆச்சரியம்!

வேடன், கையிலே வில்லும் முதுகிலே அம்புறாத்தூணியும் வைத்துக்கொண்டு போனால் ஆச்சரியப்படுவார்? இல்லை—ஆனால் விலையுயர்ந்த மோட்டாரில் அமர்ந்துகொண்டு, நாகரிகமான உடை அணிந்துகொண்டு, வில்லும் அம்பும் ஒரு விசித்திர புருஷன் வைத்துக்கொண்டிருக்கக் கண்டால், எவ்வளவு ஆச்சரியம் ஏற்படும். அதுபோலத்தான், மனித குல முன்னேற்றத்திற்கு முன்பு, சிந்தனைத் திறம் தெளிவுபடுத்தப்படுவதற்கு முன்பு கிரேக்க நாட்டவர், மற்றப் பல நாட்டு மக்கள் போலவே, அறிவுக்குஒவ்வாத, ஆபாசம் நிறைந்தகதைகளை எல்லாம்நம்பி ஆலயம் அமைத்து, 'ஆத்திகராக' விளங்கினர்-அவர்களெல்லாம் அறிவு பெற்று, தெளிவு பெற்று, அஞ்ஞானத்தை விரட்டிவிட்டு, மெய்யறிவுத் துறையிலே மேலானதோர் இடம் பெற்று, உண்மையான கடவுட் கொள்கையையும், மார்க்கத்தையும் உணர்ந்தறிந்து, கற்பனைகளைக் களைந்தெறிந்தான பிறகும், நம் நாட்டிலே, நாகரிகத்தின் மேல்பூச்சைக்கொண்ட மட்டும் எடுத்துப் பூசிக்கொண்டு, கோலத்தை மாற்றிக்கொண்டு, உலகத்தோடு உறவாடிக்கொண்டு, உயர்ந்தோம் என்றும் வீம்பு பேசிக்கொண்டு, கடவுட் கொள்கையிலேயும், மார்க்கத் துறையிலும், மாடனையும் காடனையும், மன்னாரையும் மாரியையும், போரும் போட்டியும், போகபோக்கியத்துக்காகப் போட்டதாகக் கூறும் கதைகளையே சிறப்புகளாகக் கொண்ட பல்வேறு கடவுள்களையும், அன்றுபோல் நம்பும் போக்கிலே உள்ளனர்! இஃதன்றோ ஆச்சரியம்!!

பிரம்மனுக்கும் விஷ்ணுவுக்கும், போட்டியுணர்ச்சி ஏற்பட்டதாம்! கடவுள்களின் குணம், எப்படி இருக்கிறது பாருங்கள்!! யார் பெரியவன்? என்ற பலமான பிரச்னை! இதைத் தீர்த்துவைக்க, சிவனாரிடம் சென்றனராம்! அவர், மூவரிலும், தானே மூலவர் என்பதை நிரூபிக்க, இதுவே சமயம் என்று எண்ணி, 'ஜோதிமயமாகி', யார் என் அடியையும் முடியையும் முதலில் காண்கின்றனரோ, அவரே, இருவரில் பெரியவர், என்று கூற, அடிகாண ஒரு கடவுளும், முடிகாண மற்றோர் கடவுளும் முயன்று, இரு கடவுள்களும் தோற்றதாக ஓர் 'புண்யகதை' உண்டு—இன்றும் இதனை, நம்பினவன் நமசிவாயன் அருளையும், நம்பாதவன், நாத்திகன் என்ற கெட்ட பெயரையும் பெறுகிறான்! நாட்டின் நிலைமை இதுபோல் இருக்கிறது!! திருவண்ணாமலைத் தலத்திலே, ஆண்டுதோறும் நடைபெறும் தீபதரிசனத் திருவிழா இந்த, 'போட்டி'யைக் காட்டும் கருத்தோடுதான் பக்தர்கள், மதவாதிகள், கொண்டாடுகின்றனர். கோலியும் பம்பரமும் விளையாடிக்கொண்டிருந்த இரு சிறுவர்கள், வயதுசென்றவர்களாகி, ஒருவன் வீரனாகி, ஊர்க்காவலனாகி

மகேசன் மனிதனுகி மதிற்சுவர் கட்டினுன்

ரீதிவழிவரும்போது, அவனெதிரே, சிறு பிராயத்தில் தன்னேடு ஆடிக் கொண்டிருந்த சிறுவன் முதுமைக் கோலம் இருந்தும், முன்புபோலவே ம்பரம் ஆடிக்கொண்டிருக்கக் கண் டால், என்ன எண்ணுவான்!

கிரேக்க நாடு போன்ற பல நாடு களும், நம்நாட்டைக் கண்டு, இதே விதமான எண்ணம்தானே கொள்ளமுடியும்! உபசாரத்துக்காக உள்ளத்திலுதித்ததை மறைத்து இரண்டோர் புகழுரைகளைத்தரும் என்றபோதிலும், மனதிலே, உண் மையாக, மதிப்பு ஏற்படமுடியுமா! மது நாடுதான், அன்று போலவே இன்றும், அரசமரம் சுற்றும் அம்மை மையும், அடிமுடிகாணும் திரு விழா நடாத்தும் ஐயாமார்களையும், கொண்டதாக இருக்கிறதே! முன்பு நடந்துசெல்வர், அல்லது கட்டை வண்டியில் செல்வர், தீபம் பார்க்க! இப்போது, புதிய மோட்டாரில் புறப் படுகின்றனர், கார்த்திகைக்கு! வித்தி யாசம் கோலத்திலேயே தவிர, குணத் தில் இல்லையே! குவலயம் கேலி செய் யாமலா இருக்கும்!

கிரேக்கநாட்டிலே, அறிவுக் கதிர் முளைத்ததும், பாசிடன், பரிகாசப் பொருளாக்கப்பட்டான்! பகுத் தறிவு வென்றதும், மாஜி கடவுளா ஞன்! அதற்கு முன்பு, கோயில்தான், கொண்டாட்டம்தான்!! பாசிடன் கோலாகலத்தைக்காணக் கூடும் பக் தர் கூட்டம் ஏராளம்தான்! கடலாதி பனைப்பற்றியகதைகளைப்புண்யகதை யென நம்பி, கேட்டுப்பூரிப்படைந்த நாடு, முக்திக்கு 'அச்சாரம்' தந்த தாகத்தான் கருதினர் — அந்நாள் கிரேக்கர்கள்.

அண்ணன் அண்டமெல்லாம், களும் பெருங்கடவுளாகவும், கட லாதிபதி என்ற நிலைமட்டுமே தனக் கும் என்ற ஏற்பாடு, பாசிடனுக்குப் பொருமையை மூட்டி விட்டது— ஜூவசைத்தொலைத்துவிட்டு, தானே உலக்கடவுளாகி விட வேண்டும் என்று எண்ணினுன் — அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந் தான். ஜூவசுக்கு எப்படியோ இரக சியம் தெரிந்துவிட்டது — உடனே, சதிர்க்கத்துணிந்த தம்பிக்குச் சாப மிட்டு, பூலோகத்துக்குத் தள்ளி விட்டார்.

கடவுள் நிலையை இழந்து 'மானிட ஞன' பாசிடன், டிராய் எனும் நகரை ஆண்டுவந்த, லயாமிடான் எனும் அரசனிடம் வந்தான். அந்தஅரசன், நகரைச் சுற்றிலும், பலமானதோர், கோட்டைச்சுவர், கட்டித்தந்தால், அரச மரியாதை செய்வதாகக் கூறி ஞன். கடலைஅடக்கிஆண்டுவந்தபாசி டன் கருங்கற்சுவர் கட்டும் பணியை மேற்கொண்டான். மண்சுமந்த மகே சன்கதை இல்லையா நம்நாட்டில்-வை கைக்குக் கரை அமைக்க, கூலியா ளாகவந்து, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்ட பெம்மான் கதை, இன்றும் திருவிழாவாகக்கொண்டா டப்படுகிறதல்லவா! அதுபோன்ற கடவுள் கதை, கிரேக்கப்புலவன் கட் டினுன்—ஆனல் இன்று அதை நம் புவார் இல்லை—திருவிழா இல்லை.

பாசிடன், இந்தப் பெரும்பணியை எவ்வாறு செய்து முடிப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது, "நான் உதவி செய்கிறேன்" என்று கூறினுன், அபாலோ! அபா லோவும் ஒரு கடவுள்தான் (விவரம் பிறகு) ஜூவசை எதிர்த்த குற்றத் துக்காகவே. அபாலோவும், பூலோ கத்துக்குத் துரத்தப்பட்டான். எனவே இரு கடவுள்களும், மானிட உருவில், டிராய் நகரக் கோட்டைச் சுவர் கட்டும் காரியத்தில் ஈடுபட்ட னர்!

அபாலோவிடம் ஓர் குழல் உண்டு —மாயக் குழல்! தாயைச் சேய் மறக்கவும், கணவனை மனைவி மறக்க வும், கொல்லும் கொடுமையைப் புலியும் பாம்பும் மறக்கவும் செய்ய வல்ல, மதுரமான இசை தரும், மாயக் குழல், எமது கண்ணனிட மன்றே இருந்தது!—என்று கேட் பர், பக்தர்கள்! ஆம்! அன்பர்காள்! அதேபோல, கிரேக்க நாட்டுக் கட வுள் கதை கட்டினேரும், அபாலோ தேவனிடம் அதி அற்புதமான மாயக் குழல் இருந்ததாகக் கூறினர்!

அந்த மாயக் குழலை அபாலோ, ஊதிட, மலைகள் உருண்டோடிவந்த னவாம், சுவர் கட்டும் பணிக்கு உதவியாக! குழல் ஊத ஊத, பெரும் பாறைகள், ஒழுங்காக, வரிசையாக, தாமாகவே அமைந்து, பலமான, சுவராகிவிட்டன! எப்படிச் சாத்ய மாகும் என்று ஏக்கம்கொண்டிருந்த பாசிடன், அபாலோவின் உதவியால் இந்தப் பணியை வெற்றிகரமாக முடித்துவிட்டு, மன்னனிடம் சென் ருன், பரிசு பெற.

மன்னன் அயோக்யன்—பரிசு தர மறுத்தான்—பணி முடித்த பாசிட னுக்கு. கோபம் மூண்டது, பாசிட னுக்கு, எனவே, ஒருபயங்கரப்பிரம்ம ராட்சசை உண்டாக்கி, ஊரைத் தும்சம் செய்யும்படி ஏவிவிட்டுச் சென்றுவிட்டான்.

ஒரு பயங்கரமான பிரம்மராட்ச சனை உண்டாக்கும் 'சக்தி' மானிட உருவிலும் பாசிடனுக்கு இருந்த போது, சுவர் கட்டவா, முடியாமல் போய், அபாலோவின் உதவி தேவைப்பட்டது! பொருத்தமாக இல்லையே!! என்று கூறத்தோன்றும். பொருத்தம் இருக்கிறதா, பொருள் இருக்கிறதா, என்று பார்க்கக் கூடாது, புண்ய கதைகளில்—பாபம் —மகா பாபம்!!

டிராய்நகரம் அல்லோல கல்லோ லப்பட்டது, பயங்கர ராட்சசனல்— எதிரே சிக்கினவர்களை எல்லாம் பிடித்துத் தின்னத் தொடங்கிற்று, அந்தப் பயங்கர உருவம்.

என்னசெய்வான் மன்னன்? அருள்பெற்ற ஆவேசமாடியை அணு கினுன். அவன் ஓர் யோசனைசொன் ஞன். அழகான கன்னியை, அந்தப் பிரம்மராட்சசனுக்குப் பலிகொடுத் தால், அழிவுவேலை நின்றுபோகும் என்ருன். அதன்படியே ஆண்டுக் கொரு அழகிய கன்னி பலி இடப் பட்டுவந்தாள்—கடைசியாக மன்ன னின் மகள் ஹெஸியோன் பலியாக வேண்டிய நிலைவந்தது—அப்போது தேவாம்சம் பெற்ற ஹெர்குலிஸ் எனும் வீரன் ராட்சசனைக் கொன் ருன், என்று கதை முடிகிறது.

இந்தக்கதை மட்டும் கிரேக்க நாட்டிலே இல்லாமல், நம்நாட்டிலே புண்யகதையாக இருந்திருந்தால், திருவிழா இன்றும் நடைபெறுமே!!

சாபம் தீர்ந்து, பழையபடி பாசி டன், கடவுளுலகு சென்று ஜூவ

காதல் போட்டியில் கடவுள்

சின் அனுமதிபெற்று, கடலாதிப னானான்.

பாசிடனின், பத்னியின் பெயர், ஆம்பிடிரைட் என்பதாகும். இவள் உடன்பிறந்த மங்கையர் ஐம்பதின் பர்! இவளை, மணம் புரிந்துகொள்ளப் பாசிடன் சென்றபோது, இவனது, புயங்கர உருவைக்கண்டு, பயந்து, ஓடினாளாம்!! பாசிடனுக்கோ, காதல்! பெண்ணுக்கோ, கிலி! பாசிடன் உடனே ஒருகடல்குதிரையைத் தூது அனுப்பி, பெண்ணின் மனதை மாற்றச்செய்து, பின்னர் மணமுடித்துக் கொண்டான். பல குழந்தைகள் பெற்றெடுத்தாள் பத்னி. பாதிமனித உருவும் பாதி மீனுருவம் கொண்ட, டிரிடன்என்பானே, பாசிடனின் மக்களுக்குள் கீர்த்தி வாய்ந்தவனாக விளங்கினான்.

காதலின் சக்தியை அனுபவ பூர்வமாகக் கண்டதனால் போலும், ஒருமுறை, பாசிடன், பூலோகத்திலே, காதல் பாதையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இடாஸ் எனும் வாலிபனுக்கு, தன் ரதத்தைத் தந்து உதவி புரிந்தான்—என்றோர் கதை உண்டு. இந்தக் காதலியின் பெயர், மார்ப்பேசா! இவள் தந்தை, காதலைத் தடுத்திடவே, இடாஸ் துயருற்று, என்ன செய்வதென்று ஏக்கமடைந்த போது, பாசிடன், தன் ரதத்தைக் காதலனுக்குத் தர, அதிலே, காதலியை ஏற்றிக்கொண்டு, வந்தான், காதலன். பெண்ணைப் பறிகொடுத்து விட்ட, ஈவினஸ் என்பான், துரத்திக்கொண்டு வந்தான்—(ருக்மணியைக் கண்ணனும் கொண்டுவந்தது, இம்முறையில்தான்!)

ஆனால், பாசிடனின், ரதத்தைப் பிடிக்க முடியுமா! காதலர் தப்பினர்—தகப்பனின் கோபத்தில் இருந்து தான்—கடவுளின் காமத்தில் இருந்தல்ல!

இந்த அழகு மங்கையைக் கண்டு விட்டான் அபாலோ தேவன்! விடமாட்டேன் என்று கூறி, வழி மறித்துக் கொண்டான். நல்ல வேளையாக, அசரீரி கூறிற்றாம், 'பெண் யாரை விரும்புகிறாளோ, அவனே அவளுக்கு மணாளனாகக் கடவன்' என்று.

பெண்ணின் சங்கடத்தைக் கவனியுங்கள்.

ஒருபுறம், அபாலோ—கடவுள்—அழகன்!

மற்றோர் புறம், ஆபத்துகளைத் துரும்பென எண்ணிய காதலன்!

யாரைத் தேர்ந்தெடுப்பது? தேவனையா? தேடிவந்த காதலனையா?

மதி மிக்கவள் அந்த மங்கை. அபாலோவோ கடவுள்களில் ஒருவர்—மூப்பு, பிணி, சாக்காடுகளைக் கடந்தவர். எனவே அவர் எப்போதும் இன்று போலவே எழிலும் இளமையும் கொண்டவராக இருப்பார். நாமோ மானிடகுலம்—மூப்பு வரும், எழில் அழியும்! நாம் கிழவியாகி, அபாலோ குமரனாகவே அப்போதும் இருந்தால், நமதுநிலை என்ன ஆகும்? காதல் கருகுமே!! வேறோர் வனிதையைபன்றோ, குமரன் தேடிக் கொள்வார்! மனம் உடையுமே நமக்கு!!

நமது காதலனோ, நம்மைப் போலவே, மானிடன்—நாம் கிழவியாகும் போது அவனும் கிழவனாவான்—காதலுக்குச் சிக்கல் ஏற்படாது. எனவே நமக்கு ஏற்றவன் இடாசே, என்று தீர்மானித்தாள்.

அசரீரி அறிவித்தபடி, அவள் இடாசையே மணம் செய்துகொண்டாள்.

அபாலோவின் திட்டம் முறிந்தது கண்டு, பாசிடன் மகிழ்ந்தான்.

இப்படிப் பலகதைகள், பாசிடனைப்பற்றி, கடலாதிபதியின் பராக்கிரமத்தைப்பற்றி, மகாகவி ஹோமர் கூடத்தான் பாடியிருக்கிறார்! கல்லுருவங்கள் பலசமைத்தனர், கலைத் திறமையுடன்! கோயில்கள் எழுப்பினர் பலஊர்களில்! எனினும் அறிவு வளர்ச்சி ஏற்பட்டதும், இப்படி எல்லாம் கற்பனைகளை நம்பி நம்பி, கருத்தைக்கெடுத்துக்கொள்ளக் கூடாது என்ற எண்ணம் உதித்தது. கடலின் தன்மையும் பொருளும் விளங்கா விட்டால், கண்டபடி ஒருகதைகட்டுவதா!— என்று கேலி பேசினர் முதலில்—ஏற்கனவே கட்டப்பட்டகதை அஞ்ஞானத்தின் அடையாளம் என்றுவெறுத்துத்தள்ளினர்; இன்று விஞ்ஞானம், கடலைப்பற்றிய அறிவுரையை அவனிக்கு அளித்திருக்கிறது. பாசிடன் மறைந்தான்—மாஜி கடவுளானான்!!

✽

"மாநிலப் புலவர் மாணவர் மாநாடு"

'முதன் மொழி தமிழ்' என்று அரசாங்கத்தாரால் முடிவுசெய்யப் பட்டிருக்கும் இன்றைய நிலையிலும் தமிழ்மொழி, தமிழ்படிப்பு இவற்றின் நிலையும், தமிழ்ப்புலவர்கள், தமிழ் மாணவர்கள் இவர்களின் நிலையும் விரும்பத்தக்க அளவில் இல்லாதது அனைவரும் அறிந்த தொன்றே. எனவே சென்ற ஆண்டினைப் போலவே, இவ்வாண்டிலும் பயனுள்ள வகையில் விரைவில் திருச்சிராப்பள்ளியில் அல்லது தஞ்சையில் மீண்டும் "மாநில புலவர் மாணவர் இரண்டாவது மாநாடு" கூட்டவேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவே இம்மாநாடு பற்றிய கருத்துக்களை உடனே, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு, தமிழறிஞர்கள், தமிழனுதாபிகள், தமிழ் மாணவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவர்,
மாநிலப் புலவர் மாணவர்கழகம்
அண்ணாமலை நகர்.

✽

விற்பனைக்கு

பெரிய காஞ்சிபுரம் 4-வது டிவிஷன் ஏகாம்பரநாதர் சன்னதி தெரு 16 B, எண் உள்ள, மின்சார விளக்கும், தண்ணீர்க் குழாயும் உள்ள வீடும், மனையும் விற்கப்படும். விபரம் வேண்டுவோர்,

ச. திருமகள்
31B, வில்லேஜ் ரோட்,
நுங்கம்பாக்கம், சென்னை 6.

✽

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.